விலை ரூபா: 8.00

Registered as a News paper in Sri Lanka

வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஆனி 09 வியாழக்கிழமை (23.06.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 186

ராம்கோ

NVADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது

சீமெந்து

பொதுக்கட்டமைப்பை பிரச்சினையாக்கி அரசியலுக்குள் நகர்த்துகிறார் ஜனாதிபதி

இவ்வாறு தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

குற்றஞ்சாட்டுகின்றார் சு.ப. தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சியில் இருந்து ஐங்கரன்)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என்ற வகையில் பொதுக்கட்டமைப்புக்குறித்து உடனடியாக முடிபு எடுத்து நடைமுறைக்கு கொண்டு வருவது பெரும்பிரச்சினை அல்ல.

எனினும் பொதுக்கட்டமைப்பினை பாரிய பிரச்சினையாக்கி அதனை அரசியல் காய் நகர்த்தலுக்குள் தள்ளி தங்களுடைய அரசியல் இலாபங்களுக்கு பயன் படுத்தவே முயற்சிகள் நடைபெறுகின்றன. அதனைத்தான் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும் செய்து வருகிறார்.

நேற்று நோர்வேயின் பிரதிவெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிசனை சந்தித்து பேசியபின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத்தெரிவித்தார். ஊடகவியலாளர்களுக்கு வழங்கிய செவ்வியின் முழுவிபரமும் வருமாறு.

(12 ஆம் பக்கம் பார்கீக)

பொலிஸ் சார்ஜன்ட மீது நேற்று துப்பாக்கிச்சூடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் பொலிஸ் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த சார் ஜன்ட் ஒருவர் நேற்று முற்பகல் இனந்தெரியாத நபர்களினால் சுடப் பட்டுள்ளார்.

சுடப்பட்ட அவர் காயமடைந்த நிலையில் மட்டக்களப்பு வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளார். மட்டக்களப்பு மறியல்சாலை விடுதியில் இயங்கும் பொலிஸ்

(12 ஆம் பக்கம் பார்க்க)

நோர்வே தூதுவரிடம் மகஜர் கையளிப்பு

(கிளிநொச்சி)

பொதுக்கட்டமைப்புக்கு எதிராக சிங்கள பௌத்தபேரினவாதிகள் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளைக் கண்டித்தும் இலங்கை அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் இணைந்து பொதுக்கட்டமைப்பை விரைவில் உருவாக்க வேண்டும் எனவும் வலியுறுத்தி இலங்கைக்கான நோர்வேத்தூதுவரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத் தலைவர் தவரட்ணம், நோர்வேயின்



இலங்கைக்கான தூதுவர் ஹான்ஸ் பிறஸ்கரிடம் மகஜரை கையளித் தார்.இக்கையளிப்பு நிகழ்வு கிளி

(12 ஆம் பக்கம் பார்க்க)

நயினாதீவில் குடும்பப்பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய தேர்த்திருவிழாவிற்கு சென்ற குடும்பப்பெண் ஒருவர் திடீர் என மரணமானார்.

நேற்று அதிகாலை 3மணியள வில் இவர் மரணமானதாக தெரி விக்கப்பட்டது. புத்தூர் வன்னிய சிங்கம் வீதியைச்சேர்ந்த துரைரட் ணம் பூபதி (வயது 51) என்பவரே மரணமானவராவார்.

இவரது சடலம் உற்சவகாலப் பொலிஸாரால் நயினாதீவு வைத்தி யசாலையில் ஒப்படைக்கப்பட்டுள் ளது. (ச)

ஹெல்கிசன்-தமிழ்ச்செல்வன் நேற்று சந்தித்துப் பேச்சு

(கிளிநொச்சி)

நோர்வேயின் பிரதிவெளிவிவ காரஅமைச்சர் விடார் ஹெல்கிசன் நேற்று தமிழீழ விடுதலைப்புலிக ளின் அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இச்சந்திப்பானது நேற்றுக்காலை 9.45 மணிக்கு கிளிநொச்சி நடுவகப் பணியகத்தில் நடைபெற்றது.

சுமார் ஒருமணி நேரம் நடை பெற்ற இச்சந்திப்பில் நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர், தமிழீழ காவல்துறையின்

பொறுப்பாளர் நடேசன், தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகப்பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

பொதுக்கட்டமைப்பு தவிர்ந்த விடயங்களில் அரசுடன் நெகிழ்வுப்போக்கை கடைப்பிடிக்க மக்கள் விடுதலை முன்னணி தீர்மானம்

(கொழும்பு)

அரசாங்கத்தின் ஸ்திரத்தன்மை பாதிக்கப்படாத வகையில் நெகிழ் வுப்போக்கை கடைப்பிடிக்க ஜே. வி.பி தீர்மானத்துள்ளதாக தெரி விக்கப்படுகின்றது.

பாராளுமன்றத்திலும் மாகாண சபைகளிலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அர சாங்கத்தின் ஸ்திரத்தன்மை பாதிக் கப்படாத வகையில் நெகிழ்வுப் போக்கை கடைப்பிடிக்க ஜே.வி.பி தீர்மானித்திருப்பதாக அக்கட்சி வட்டாரங்கள் தகவல்கள் வெளியிட் டுள்ளன.

ஐக்கிய தேசியக்கட்சி மீண்டும் ஆட்சிக்கு வருவதனை தவிர்க்கும் நோக்கிலேயே இம் நடைமுறை பின்பற்றப்படவுள்ளது. அதற்கென சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஜே.வி.பியும் அதிக பட்சபங்களிப் புடன் செயற்படவுள்ளதாக தெரி விக்கப்படுகின்றது.

இதேவேளை உத்தேசப் பொதுக்கட்டமைப்பில் ஜனாதிபதி கையெழுத்திட்டால் இந்த அனைத்து நெகிழ்வுப்போக்குக ளையும் கைவிடுவதுடன் சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் இருக்கும் அனைத்து அரசியல் தொடர்பு களையும் துண்டித்து விடுவதென வும் ஜே.வி.பி.தீர்மானத்திருப்பதா கவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திடுவதானது ரணில் விக் கிரமசிங்க பிரதமராக இருந்த போது விடுதலைப்புலிகளிடம் அவர் கைச்சாத்திட்ட சமாதான உடன்படிக்கைக்கு ஒப்பானது என ஜே.வி.பி.கருத்து வெளியிட்டுள்ளது.

சமாதான உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட தினத்தில் இருந்து ஐக்கிய தேசியக்கட்சியுடனான அனைத்து தொடர்புகளையும் துண்டித்ததைப்போல உத்தேசப் பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப் பட்டால் சிறிலங்கா சுதந்திரக்கட் சியுடனான அனைத்து தொடர்பு களையும் துண்டிப்பதாக ஜே.வி.பி தீர்மானித்துள்ளதாக கூறப்படுகிறது.(ச-4)

அரசாங்கத்தின் ஊடாகவே முஸ்லிம்களுக்கு பிரதிநிதித்துவம்

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் கைச்சாத் திடப்படவிருக்கும் பொதுக்கட்ட மைப்பில் முஸ்லிம்களுக்கு தனித் தரப்பு கிடைக்கக்கூடிய வாய்ப்பு இல்லை என்று நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிசன் மீண்டும் தெரிவித்துள் ளார்.

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப் பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பை முடித்துக்கொண்டு கொழும்பு திரும்பும் வழியில் அம் பாறை மாவட்டம், கல்முனைக்கு அவர் பயணம் மேற்கொண்டார்.

அங்கு மாவட்ட பள்ளிவாசல் களின் சம்மேளனப்பிரதிநிதிகளை விடார் ஹெல்கிசன் சந்தித்தார். அம்பாறை மாவட்ட பள்ளிவாசல் கள் மற்றும் முஸ்லிம் நிறுவனங் களின் சம்மேளனப்பிரதிநிதிகளு டன் நடந்த சந்திப்பில் பொதுக்கட் டமைப்பு தொடர்பாகவும் அதில் முஸ்லிம்களின் நிலைமை குறித் தும் ஆராயப்பட்டன.

அதன்போது முஸ்லிம் நாடாளு மன்ற உறுப்பினர்கள் அரசாங்கத் தில் முஸ்லிம்களால் தெரிவுசெய் யப்பட்டவர்கள். ஆதலால் அரசாங் கமூடாக முஸ்லிம்களுக்கு பிரதி நிதித்துவம் வழங்கப்படுகின்றது என்று சுட்டிக்காட்டியதோடு முஸ்லிம்கள் ஒற்றுமையுடன் செயற்படுவதன் அவசியம் பற்றியும் அவர் வலியு றுத்தினார்.

தனித்தரப்பாக கையொப்பமிடும் வாய்ப்பளிக்கப்பட்டால் அந்தக் கையொப்பத்தை முஸ்லிம்கள் தரப்பு யார் கைச்சாத்திடுவதென விடார் ஹெல்கிசன் கேள்வியெழுப் பினார்.காரைதீவு, சாய்ந்தமருது மற்றும் கல்முனை ஆகிய இடங்களில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிட்ட விடார் ஹெல்கிசன் சில அகதிமுகாம் களுக்கு பயணம்செய்து மக்களை யும் சந்தித்து உரையாடினார்.(ச-4)

EXPOAIR

your friend in the skies...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

021 - 222 3891, 222 6297, 0777-234999,

011-2372952/3, 011-2360290/1

e.mail:- jaffna@expoavi.com,reservations@expoavi.com.

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

எக்ஸ்போ ஏயார்

வானத்தில் உங்கள் நண்பன்...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

மருத்துவப் பொருட்களை விமான உதிரிப்பாகங்கள் என ஓமந்தை பொலிஸார் ஏற்படுத்திய பரபரப்பு

(கொழும்பு)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் வவுனியா ஓமந்தை இராணுவ சோதனைச் சாவடியூடாக லொறியொன்றில் எடுத்துச் செல்லப்பட்ட மருந்துவ உபகரணங்களை விமான உதிரிப்பாகங்கள் என்று தடுத்த வைத்து பரபரப்பை ஏற்படுத்தி பரிசோதனைக்குட்படுத்திய சம்பவமொன்று கடந்த சனிக்கிழமை இடம் பெற்றுள்ளது.

அத்துடன், ஆதாரமற்ற இந்தக் குற்றச்சாட்டினால் தமிழர் புனர்வாழ்வுக் கழக அதிகாரிகள், லொறிச் சாரதி, அதன் உதவியாளர் உட்பட பலர் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்ட அவல நிலையும் ஏற்பட்டது. தமிழர் புனர்வாழ்வுக் கழகம் லொறியொன்றில் வன்னிக்கு விமான மற்றும் ஹெலிகொப்டர் உதிரிப்பாகங்களை கடத்திச் சென்ற போது அவை மீட்கப்பட்டுள்ளதாக வெளியான பொலிஸ் செய்தியை யடுத்து பாதுகாப்புப் படை அதிகாரிகள் அவற்றை பரிசோதனை செய்ய விமானப் படையின் விமான பொறியியலாளர்களை அனுப்பியுள்ளனர். விமானப் படையினர் அவற்றை தீவிர பரிசோதனைக்குட்படுத்திய பின்னர் அவை வைத்திய இயந்திர உபகரணங்கள் என்று தெரிவித்துள்ளனர்.

இதனை அடுத்து அங்கு சென்ற பாதுகாப்புப் படைகளின் வைத்தியர்கள் அடங்கிய குழு விமானப் படையினர் தெரிவித்த கூற்று உண்மையானது என்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ள பொருட்கள் எக்ஸ்ரே இயந்திரங்களுக்குப் பயன்படுத்தும் உதிரிப் பாகங்கள் என்றும் உறுதிப்படுத்தியுள்ளனர். இதனையடுத்து ஓமந்தை சோதனைச் சாவடி பொலிஸார் வழங்கிய உறுதிப்படுத்தாத தகவல்களையடுத்து தவறு இடம்பெற்றுள்ளதாக வவுனியா பொலிஸ் நிலைய பொலிஸார் தெரிவித்துள்ளனர். இச் சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸாருடன் தொடர்பு கொண்டு கேட்ட போது சந்தேகத்தின் பேரிலேயே லொறியில் எடுத்துச் செல்லப்பட்ட இயந்திரபாகங்களைத் தடுத்து வைத்து பரிசோதனை செய்ததாகவும் அவை தடை செய்யப்பட்ட பொருட்கள் இல்லை என்பது உறுதிபடுத்தப்பட்டதும் பொருட்களும் தடுத்து வைக்கப்பட்டவர்களும் விடுவிக்கப்பட்டதாகவும் இன்ஸ்பெக்டர் காலிங்க தெரிவித்தார். (து)

வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி மருந்தேற்றல்

(கல்வியங்காடு)

கோப்பாய் பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் எல்லைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு ஏ.ஆர்.வி. தடுப்பூசி மருந்து ஏற்றப்படவுள்ளது.

பொதுவாக கோப்பாய் பிரதேசத்தில் அண்மைக் காலங்களில் விசர் நாய்க்கடி அதிகரித்துள்ளது. இதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அத்தோடு உயிராபத்தையும் எதிர் நோக்க நேரிடுகின்றது.

இதனைத் தடுக்கும் முகமாக எதிர்வரும் வாரத்தில் மேற்படி பின் வரும் இடங்களிலும் இத் தடுப்பூசி மருந்து வழங்கப்படவுள்ளதாக கோப்பாய் பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ்.கண்ணதாசன் அறிவித்துள்ளார்.

இன்று வியாழக்கிழமை 9.00-10.00 மணிவரை கோப்பாய் தெற்கு நாவலடி சனசமூக நிலையத்திலும். 10.45-12.00 மணிவரை கோப்பாய் மத்தி வெள்ளெருவைப் பிள்ளையார் சனசமூக நிலையத்திலும் 12.15-1.45 மணிவரை கோப்பாய் மத்தி அம்மன் கோயிலடி சனசமூக நிலையத்திலும் இத் தடுப்பூசி மருந்து ஏற்றப்படவுள்ளன.

ஆகவே, மேற்படி பிரதேச மக்களைத் தவறாது தமது வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது. (ற-74)

நாடளாவிய ரீதியில் ஆசிரியர்களுக்கு முகாமைத்துவப் பயிற்சிச் செயலமர்வுகள்

(கொழும்பு)

அரசாங்கப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பாடசாலை முகாமைத்துவம் மற்றும் வகுப்பு முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி செயலமர்வுகளை கல்வி அமைச்சு நாடளாவிய ரீதியில் தற்போது நடாத்தி வருகின்றது.

இதில் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் தமது கடமை நேரத்தின்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து தீர்வுகளை பெற்றுக்கொடுக்கும் நோக்கத்துடன் உலகவங்கியின் நிதியுதவியுடன் இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது இயங்கி வரும் 100 ஆசிரியர் மத்திய நிலையங்களின் மூலமாக சகல கல்வி வலயங்களிலும் ஆசிரியர்களுக்கான பயிற்சி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில 24 ஆசிரிய மத்திய நிலையங்கள் மூலமாக ஆசிரியர்களின் தரவிருத்தியையும் தொழில்வாண்மையையும் அதிகரிக்கும் வகையில் விசேட செயலமர்வுகள் நடத்தப்பட்டு வருவதாக மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-9)

விபத்து

(கல்வியங்காடு)

லொறியுடன் மோட்டார் சைக்கிள் ஒன்று மோதியதில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவர் படுகாயமடைந்துள்ளார்.

இவ்விபத்து கடந்த திங்கட்கிழமை மாலை 5.00 மணியளவில் இராஜவீதி சந்தியில் இடம்பெற்றுள்ளது.

வேலணை பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்குச் சொந்தமான லொறியுடன் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளாகியது.

காயமடைந்த பிரஸ்தாப நபர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.(ற-74)

சிறுவிளம்பரம்

மலையாள பகவதி ஜோதிடாலயம்

Pandit Nara Semanaidu
World Expert Astrologer

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டித் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள் கொண்டு கைரேகை, பிரந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை, தொழில், வியாபார இலட்சிகர விடயங்கள். வாகை, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர்கால பலாபலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு,

ஹோட்டல் பிள்ளையார் இன்
அறை இல.09,
31, மானிப்பாய் வீதி
யாழ்ப்பாணம்.
T.P - 0779122836
நேரம் காலை 9.00 -
(9567). இரவு 8.30 வரை

ஜோதிடம்

திருமண ஆண் பெண் பதிவு திருமண பொருத்தம், ஜாதக பலன், திருமண வியாபார முன்னேற்ற தடை இன்னும் பல. நாடவேண்டியது: 159A கோவில் வீதி, நல்லூர் ராகவேந்திர ஜோதிடம். (9706)

விசேட ஆராதனை

ஸ்ரீ ராகவேந்திர ஆலயத்தில் பிரதி வியாழன், சனிக்கிழமைகளில் விஷேட பூஜை, அகண்ட தீப பூஜை நடைபெறும். மற்றும் ராகவேந்திர விஷேட ஆராதனை 24.06.2005, 23.07.2005 திகதிகளில் மாலை 6.00 மணிக்கு நடைபெறும். (9706)

இராசிபலன்

23.06.2005
(ஆனி 09, வியாழக்கிழமை)
பிரதமை முற்பகல் 06.09 மணிவரை
தூதியை பின்னிரவு 5.45 மணிவரை
பூராடம் இரவு 07-54 மணிவரை
இராகுகாலம் 01.24 -2.54 மணிவரை
சுபநேரம் 07.24 - 8.54 மணிவரை

மேடம்	மனச்சஞ்சலம், ஆன்றோர் மதிப்பு, முயற்சி தாமதம், கட்டுப்பாடு.
இடபம்	வீண்தொல்லை, பிரயாண பயம், எடுத்த கருமங்கள் தாமதமாகும், பண விரயம்.
மிதுனம்	கௌரவமான நிலை, களஸ்திர நன்மை, வாகன வசதி, பொருள்சேர்க்கை.
கடகம்	சுகவாழ்வு, செல்வாக்கு, புதிய முயற்சி, சத்துருஜெயம்.
சிங்கம்	காரிய இடையூறு, குடும்பக்கவலை; பணக்குறைவு, நண்பர்கள் சந்திப்பு.
கன்னி	கல்வியில் மேன்மை, அற்பர் உறவு, பயந்த சுபாவம், முயற்சி தாமதம்.
துலாம்	பெருமையடைதல், காரிய சித்தி, பொருள் சேர்க்கை, உறவினர் வருகை.
விருச்சிகம்	மாதர் நட்பு, பொருள் விரயம், முயற்சி தாமதம், அதிகவார்த்தை.
தனுசு	பெரியோர் சந்திப்பு, ஆழ்ந்த சிந்தை, புதிய பொருள் சேர்க்கை, சயனசுகம்.
மகரம்	பிதா சிந்தை, சுபசெலவு, மனஸ்தாபம், முயற்சி தாமதம்.
கும்பம்	தொழில் சிந்தை, உறவினர் வருகை, எடுத்தகாரியம் கைகூடும், தன வரவு.
மீனம்	சுபநிகழ்வு, நல்ல செய்தி, பிறருக்கு உதவுதல், தொழில் நன்மை.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது
–வளவன்

சுமார் 2 ஆயிரம் குடும்பங்கள் வவு.நலன்புரி நிலையங்களில்

(வவுனியா)

வவுனியாவில் சுமார் 2000 குடும்பங்கள் நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இருவர்களை மீளக்குடியேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் வி.சண்முகம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சர்வதேச அகதிகள் தினத்தை முன்னிட்டு வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் கடந்த திங்கட்கிழமை விசேட வைபவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இந்த வைபவத்தை ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயமும் கிராம அபிவிருத்தி நிறுவனமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தும் நோக்கோடு இந்த வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற-2)

பாரம்பரிய வைத்தியர்களை ஊக்குவிக்க விசேட திட்டம்

(கொழும்பு)

நாட்டில் உள்ள பாரம்பரிய வைத்தியர்களை ஊக்கு விப்பதற்கான விசேடதிட்டம் ஒன்றை நாடளாவிய ரீதியில் மேற்கொள்ள சுதேச வைத்தியத்துறை அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதனடிப்படையில் பாரம்பரிய வைத்தியர்கள் அவர்களது சிகிச்சை முறைகளைத் தொடர்ந்து மேற்கொள்வதற்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்கும் பொருட்டு சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் திஸ்ஸகரலியத்த தெரிவித்துள்ளார்.

புதிய திட்டத்தின் கீழ் அவர்களுக்குத் தேவையான கட்டட வசதிகள்உட்ப ஏனைய வசதிகளைச்செய்து கொடுக்க வேண்டும் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இத்திட்டத்தின் முதல் கட்டமாக 12 வைத்தியர்கள தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு இந்த வசதிகள செய்து கொடுக்கப்படவுள்ளன.

அவர்களுக்கு 12 நோயாளர்கள் தங்கி நின்று சிகிச்சை பெறும் அளவிலான வைத்தியசாலை ஒன்றும் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதாக அமைச்சர் திஸ்ஸகரலியத்த மேலும் தெரிவித்துள்ளார். (ற-2)

காசநோயாளர்கள்

(நுவரெலியா)

நுவரெலியா மாவட்டத்தில் இவ்வருட காலாண்டுப் பகுதிக்குள் காசநோயாளர்கள் இருபது பேர் இனங்காணப்பட்டுள்ளனர் என்று நுவரெலியா ஆதார வைத்தியசாலையின் காசநோய்த் தடுப்புப் பிரிவு அறிவித்துள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் அபகமுவ, தலவாக்கலை, மஸ்கெலியா ஆகிய பிரதேசங்களிலேயே இக் காசநோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்று இப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, அண்மைக் காலமாக நுவரெலியா மாவட்டத்தில் காசநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக கருத்தில் கொண்டு சுகாதார அமைச்சு நுவரெலியா ஆதார வைத்தியசாலையில் காசநோய்த் தடுப்புப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ற-2)

உள்ளூராட்சி மன்ற உறுப்பினருக்கான மாதாந்தக் கொடுப்பனவு அதிகரிப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் தற்போது இயங்கி வரும் சகல உள்ளூராட்சி மன்றங்களினதும் உறுப்பினர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவுகள் இம் மாதம் முதல் அதிகரிக்கபட்டுள்ளன.

1993 ஆம் ஆண்டின் பின்னர் முதற் தடவையாக இம்முறை உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் சம்பளக் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சின் செயலாளர் ஏ.எம்.சந்திரபால தெரிவித்துள்ளார்.

தற்போதைய வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு ஏற்ப அரசதுறை உத்தியோகத்தர்களின சம்பளக் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டிருக்கின்ற போதும் உள்ளூராட்சி மன்றங்களின் மக்கள் பிரதிநிதிகளின் கொடுப்பனவுகள் பல வருடங்களாக அதிகரிக்கப்படாமல் உள்ளன.

இந நிலைமை அமைச்சர் ஜெனக பண்டார தென்னக்கோனின் கவனத்திற்குக் கொண்டுவரபட்டதை அடுத்து இந்த சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைய மாநகரசபை மேயர் ஒருவரின் மாதாந்தக் கொடுப்பனவு 3 ஆயிரத்து 550 ரூபாவினாலும் உதவி மேயருக்கு ஆயிரத்து 800 ரூபாவினாலும், மாநகரசபை உறுப்பினர்களுக்கு ஆயிரத்து 250 ரூபாவினாலும் சம்பளங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

நகரசபை மற்றும்பிரதேசசபைகளின் உறுப்பினர்களுக்கு 2 ஆயிரத்து 5 ரூபாவினாலும், கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (ற-9)

கவிஞர் சூரியநிலாவின் 'சூரியக் குளியல்' கவிதை நூல் வெளியீட்டு விழா அண்மையில் மறைக்கல்வி நிலையத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் நூலை வெளியிட்டு வைத்து கவிஞர் கல்வயல் வே.குமாரசாமி உரையாற்றுவதையும், மேடையில் இடமிருந்து வலமாக முறையே கவிஞர் கு.ரஜீபன், பல்கலைக்கழக விரிவுரையாளர் இ.குமரன், பாதுகாவலன் ஆசிரியர் அருட்தந்தை றூபன் மரியாம்பிள்ளை, கவிஞர் சூரியநிலா (ஆ.ஜென்சன் றொனால்ட்), கவிஞர் சோ.பத்மநாதன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

ஐ.ம.சு.கூட்டமைப்பை மீளக்கட்டியெழுப்ப ஜே.வி.பிக்கு அவசியம் எதுவும் இல்லை

சோமவன்ச அமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு என்பது கடந்த காலத்தில் சொந்தமானது எம்மை மீண்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் இணையுமாறு சிலா விரும்பினார்கள். ஆயினும ஜேவீபிஅக்கட்சியுடன் இணைய வேண்டிய அவசியம் எதுவும் இல்லை என்று சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பினை மீளக்கட்டியெழுப்ப ஜே.வி.பி.உதவ வேண்டிய அவசியம் கிடையாது. ஆனாலும் நாட்டின் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு கூட்டுச் சேர்வதற்கான அவசியம் உள்ளது இருப்பினும் ஜே.வி.பி.கூட்டமைப்புடன் இணைந்து செயற்படாது எனினும் எம்முடன் சேரவிரும்புபவர்களிடையே ஜே.வி.பி. கூட்டணி அமைக்கும் எனவும் ஜே.வி.பியின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சமாதானத்தை ஏற்படுத்த இளைஞர்கள் சேர்ந்ததொரு கூட்டணியே எமக்குத்தேவை சட்டம் ஒழுங்கைப் பேணகூடிய கூட்டணி தேவை. இவ்வாறான கூட்டணி விரைவில் அமையும் என்று அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

எம்முடன் இணையத் தயாராகவுள்ளவர்களுடன் ஒத்திசைய மாட்டோம். எமக்கென ஒரு திட்டம் உண்டு. 1995இல் ஜூலை 15 அளவில் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கு திட்டமிட்டோம் ஆயினும் அது நடைபெறவில்லை இவ்வாறு சோமவன்ச மேலும் தெரிவித்துள்ளார். (ற-6)

இலங்கைவரும் சீன உல்லாசப் பயணிகள் தொகையை அதிகரிக்க தூரித ஏற்பாடுகள்

(கொழும்பு)

ஒவ்வொரு வருடமும் 50,ஆயிரம் சீன உல்லாசப் பயணிகளை இலங்கைகக வரவழைப்பதற்கான விசேட திட்டமொன்று அமுல் செய்யப்படுவதாகவும் இதற்காகப் பல நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப் பட்டிருப்பதாகவும் சுற்றுலாத்துறை அமைச்சின் மேலதிக செயலாளர் ஜோர்ஜ் மைக்கல் தெரிவித்தார்.

பீஜிங் நகரில் நடைபெறும் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் இலங்கையைச் சேர்ந்த சுற்றுலாத்துறை முகவர்கள் பங்கேற்கவுள்ளனர். என்றும் இதனால் சீன உல்லாசப் பயணிகளின் தொகை கணிசமான அளவு அதிகரிக்கக் கூடுமென்றும் இலங்கை வரும் சீன சுற்றுலாப் பயணிகளுகு உதவும் நடைமுறையில் பாஷை முட்டுக்கட்டையாக அமைந்திருக்கிறது என்றும சீன உணவு வகைகளைத் தயாரிக்கக்கூடிய சமயற்காரர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாகவும் அவர் கூறினார்.

சீனாவில இருந்து சுமார் 2கோடி மக்கள் ஒவ்வொரு வருடமும் வேறு நாடுகளுக்குச் செல்கிறார்கள். ஆனால் இலங்கைவரும் உல்லாசப் பயணிகளின் மொத்த எண்ணிக்கை 8 ஆயிரத்தையும் தாண்டவில்லை. எனவும் அவர் கவலை தெரிவித்தார். (து-2)

இன்றும் பொசன் உற்சவம்

பொசன் உற்சவத்தை முன்னிட்டு 51ஆவது படையணியினரால் யாழ்ப்பாணம் ஸ்ரீநாக விகாரைக்கு அருகிலுள்ள ஆரியகுளத்தில் நடாத்தப்படவந்த பக்திகீத நிகழ்ச்சியும், சிங்களமகாவித்தியாலய மைதானத்தில் நடாத்தப்பட்டுவந்த மாபெரும வெசாக் கூட்டுக்கண்காட்சியும ஏராளமான பொது மக்களின் வேண்டுகோளுக்கிணங்க இன்று வியாழக்கிழமையும் நடைபெறுமென 51ஆவது படையணி அறிவித்துள்ளது. (து)

முப்படை பலமிழப்பு; ஆயுதங்கள் துருப்பிடிப்பு; உசுப்புகிறார் எல்லாவல மேதானந்த தேரர்

(கொழும்பு)

முதுகெலும்புள்ள அமைச்சா ஒருவர் இருந்தால் பொதுக்கட்டமைப்பினால் ஏற்படும் விளைவுகள் குறித்து ஜனாதிபதிக்கு விளக்கிக் கூறியிருப்பார் என ஜாதிகஹெல உறுமயவின் தலைவர் எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

நாட்டைப் பற்றியும், இனத்தைப பற்றியும் அக்கறை இருப்பவர்கள் ஜாதிக ஹெல உறுமயவுடன் சேர்ந்து நாட்டைப்பிரிக்கும் அரசாங்கத்தின் பொதுககட்டமைப்பு யோசனையைத் தோற்கடித்து நாட்டையும் இனத்தையும் மதத்தையும் காக்க முனவரவேண்டுமெனவும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

நாட்டை அழிக்கும் பொதுக்கட்டமைப்பு வேண்டாம் என்ற தலைப்பில் கிரிபத்கொடவில் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு மேலும் உரையாற்றிய அவர்.

பக்தர்கள் வழங்கும் தானத்தைப் பெற்றுக்கொண்டு நாம் விகாரைகளுக்குள் இருக்கலாம். நாம் அப்படி இருந்தால் நாடும், இனமும் அழிந்துபோய்விடும். நாடும் இனமும் மதமும் அழிந்து போகையில அதுபற்றி அக்கறை உள்ளவகளால வெறுமனே பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

சமாதானம் என்று கூறிக்கொண்டு நாட்டை அழித்து விடுதலைப்புலிகளைப் பராமரிப்பது என்பன அரசாங்கம் வந்தபின்னராவது நிறுத்தப்படும என எதிர்பார்த்தோம். எமது புலனாய்வுத்துறையினர் படுகொலை செய்யப்படுகின்றனர்.

எமது தலைவர்கள் அதற்கு ஆணைக்குழுக்களை நியமிக்கின்றனர். படுகொலை செய்த பின்னர் ஆணைக்குழுக்கள் எதற்கு? ரணில் விக்கிரமசிங்க நிறுத்திய இடத்திலிருந்து கூட்டமைப்பு அரசாங்கம் விடுதலைப்புலிகளைப் பராமரிக்கிறது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் விடுதலைப்புலிகள் அனைத்தையும் இழநதனர். அதனை எமது தலைவர்கள் உணர்வதாக இல்லை. புலி இன்று எழுந்து நிற்கிறது. எமது முப்படை பலமிழந்துள்ளது. ஆயுதங்கள் துருப்பிடிக்கின்றன.

விடுதலைப்புலிகள் நாட்டின் எலலா இடங்களிலும் ஊடுருவியுள்ளனர். தனக்குப்பாதுகாப்பில்லை என ஜனாதிபதி கூறுகிறார். எமது பொலிஸாரிடம் இருக்கும் துப்பாக்கிகளை கீழே அடித்தாலும் அவை வெடிப்பதில்லை விடுதலைப்புலிகள் பொதுக்கட்டமைப்பைக் கேட்கவிலலை. எமது தலைவர்களே அதனைச் செய்தனர். இப்போது எம்மை சமாதானம் செய்ய வருகின்றனர் என்றும் குறிப்பிட்டார். (ற)

மின்சாரக் கட்டண உயர்வு இரு மாதங்கள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

மின்சாரக் கட்டணத்தை உயர்த்தும் தீர்மானத்தை இன்றும் இரண்டு மாதங்களுக்கு ஒத்திவைக்க மின்சாரசபை தீர்மானித்துள்ளது.

மின்கட்டணங்களை உயர்த்துவது தொடர்பாக வர்த்தமானி மூலம் பொதுமக்களுகு அறிவித்து அவர்களின் ஆலோசனைகளை பெறும் வகையிலேயே இந்தக்கால அவகாசம் பெறப்பட்டிருப்பதாக மின்சார சபையின் தலைவர் நஞ்சித் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

புதிய கட்டண உயர்வினால் சபையின் வருமானம் 8 வீதமாக உயரும் என்று சபைத்தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருள் உயர்வைச் சமாளிக்க 20 வீதத்தால் கட்டண உயர்வை மேற்கொள்ள வேண்டும் என்று மின்சாரசபை ஏற்கனவே அரசாங்கததிற்கு சிபார்சு செய்துள்ளது. ஆனால் அரசாங்கம் 8 வீத கட்டண உயர்விற்கே அனுமதி வழங்கியுள்ளது. (அ-9)

பாதீனியம் பரவுகிறது

(கோப்பாய்)

கோப்பாய் வடக்கு, மத்திய பகுதியில் பாதீனயச் செடிகளின் பரம்பல் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

இப் பகுதியில் பாதினியச் செடிகளை அழிக்கும் நடவடிக்கைகளில் கடந்த காலங்களில் பொது அமைப்புக்களின் உதவியுடன் கிராம சேவையாளர்கள் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

(ற-79)

குடும்ப விபரப்பட்டியல் முறை இரத்தானதால் பல சிக்கல்கள்

(கொழும்பு)

குடும்பவிபர பட்டியல் முறை இரத்து செய்யப்பட்டுள்ளதால் பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாக பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வாறான பட்டியல் இல்லாதால் சுனாமி அனர்த்தத்தின்போது பல சிக்கல்கள் நேர்ந்துள்ளதாக அமைச்சின் செயலாளர் டி.திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இதனால் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது உயிரிழந்தவர்கள் தொடர்பான உரிய விபரங்களை அறியமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (9)

செயற்பட ஆரம்பித்துள்ள இரத்தவங்கி

(மருதங்கேணி)

பருத்தித்துறை ஆதார வைதியசாலையில் இரத்தவங்கி செயற்படத் தொடங்கியுள்ளது.

இவ் இரத்தவங்கியின் பொறுப்பதிகாரியாக டாக்டர் திருமதி தினேஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த காலங்களில் இரதத உபகரணங்கள் இன்மையால் செயற்படமுடியாத நிலையில் இது இருந்து வந்தது.

தற்போது பிரதி சுகாதார மாகாணப் பணிப்பாளரின் முயற்சியால் இரத்த வங்கிக்குத் தேவையான உபகரணங்கள் யாழ்.போதனா வைத்தியசாலையிலிருந்து தருவிக்கப்பட்டு செயற்படத் தொடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-35)

சிறுவர்களின் உடல்நலத்தை மேம்படுத்த உடுத்துறையில் விளையாட்டு மைதானம்

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க பிரிவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உடல்நலத்தை மேம்படுத்தும் நோக்கத்தோடு இளையோர் செயற்பாட்டு நிறுவனமும சிறுவர் பாதுகாப்பு நிதியமும் இணைந்து உடுத்துறையில் விளையாட்டு மைதானம் ஒன்றை அமைத்துள்ளன.

இதனைக் கையளிக்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. உடுத்துறை இளைஞர் விளையாட்டுக கழகததலைவர் தலைமையில நடைபெற்ற இவ் வைபவததில் விளையாடு மைதானத்தினை இளைஞா செயற்பாட்டு கிழக்கு இணைபபாளர் இ.மதி நாடாவை வெடித்த் திறந்து வைத்தார்.

உடுத்துறை கிராம சேவை அலுவலர் க.தவராசா மைதானத்தின் பெயர்ப் பலகையை திரைநீக்கம் செயது வைத்தார். விளையாட்டு உபகரணங்களை விளையாட்டு ஆலோசகர் கணியன் வழங்கினார். (ற-35)

பெரும் போர் அனர்த்தங்களில் இருந்து மக்களைக் காத்தவர்கள் போராளிகள்

கிளி.அரச அதிபர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொசசியில் ஏற்பட்ட பெரும் போர் அழிவுகளில் இருந்து மக்களைக் காத்தவர்கள் போராளிகளே என கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சியில் கரைச்சி பிரதேச சபைக்குரிய புதிய கட்டடத்தினை திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது;

கிளிநொச்சி மண்ணிலே எறிகணைகள் குண்டுகள் மூலம் பெரும் அவலங்களைச் சந்தித்துள்ளோம். எமது அரச செயலகத்திற்கு முன்னால் குண்டுவீச்சிலே 6பேர் உயிரிழந்ததை பார்த்திருக்கிறோம்.

கிளிநொச்சி மண்ணில் இருந்து இடம்பெயர்ந்து நீண்ட நாட்கள் வாழ்ந்திருக்கிறோம். ஓலைக்குடிசைகளிலும் மண் கட்டடங்களிலும் எமது அவலங்களையும் நடத்தியுள்ளோம. இன்று அநநிலையில் இருந்து மாறி தற்காலிகமாக ஏற்பட்டிருக்கும் அமைதிச் சூழலிலே எமது மக்களின் பணிக்கென கட்டடம் ஒன்றினைக் கட்டி திறப்புவிழாசெய்யும் நிலையில் உள்ளோம். நாங்கள் எந்தவொரு நிலையிலும் நிமிர்ந்தெழுவோம் எனபதையே இது காட்டி நிற்கிறது.

பீனிக்ஸ் பறவைகள் போல தமிழ் மக்களாகிய நாம் அழிவுகளில் இருந்து மீணடெழுந்துள்ளோம். இந்நிலை தொடர்ந்து இருப்பதற்காக எல்லோரும் பாடுபடவேண்டும். பெரும் அழிவுகளில் இருந்து நாம் மீண்டெழுந்து நிற்கிறோம் இவ்வழிகளில் இருந்து எம்மைக் காத்த போராளிகளை நினைவுகூற வேண்டும். இந்த மணணிலே வாழும் நிலமையை உருவாக்கியவர்கள் போராளிகள்.

மகளுக்கு சேவைசெய்யக் கூடிய வகையிலபுதிய கட்டடங்களை திறந்து வைத்துள்ளோம். இக் கட்டடங்கள் மக்களுக்கு பணியாறறவே உள்ளன ஒவ்வொரு பணியாளர்களும் அர்ப்பணிப்புடன் இந்த மண்ணிற்கு பணியாற்ற வேண்டும் எமது மாவட்டத்தில் நிலவும் ஆளணிப் பறறாக்குறையினை கருத்தல் கொண்டு சகல அரச பணியாளர்களும் பொறுப்புணர்வுடன் பணியாறறும்போது தான் மாவட்டம் அபிவிருத்தி அடையும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கரைசசி பிரதேச சபையின் வசேட ஆணையாளர் பொன் நித்தியானந்தன் தலைமையில் நன்பகல் 12.30 மணிக்கு இடம்பெற்ற இந் நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை கிளிநொச்சி பிரதேச பொறுப்பாளர் அருள்ஏற்றி வைத்தார்.

அரங்க நிகழ்வில் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயக் குருக்கள இரத்தினேஸ்வரக் குருக்கள் அருட்தந்தை தேவசகாயம் நிர்வாக சேவையைச் சேர்ந்த ராதை, கிளிநொச்சி பிரதேச பொறுப்பாளர் அருள் ஆகியோர் உரையாற்றினர்.

இதேவேளை, கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக புதிய கட்டடமும் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. முற்பகல் 10.30மணியளவில் கரைச்சிப் பிரதேச செயலர் க.சுலோஜினி தலைமையில் இடம்பெறற இந் நிகழ்வில் கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் புதிய கட்டடத்தினைத் திறந்துவைத்தார். (ற)

இன்று ஒரு தகவல்

எறும்பின் கர்வம்

. ஒரு சமயம் இந்த உலகிலுள்ள எறும்புகள் எல்லாம் சேர்ந்து ஒரு மாநாடு நடாத்தியதாம். அகில உலக எறும்புகள் மாநாடு. அதில் ஒரு எறும்புத்தொண்டர் பேசுகிறார் ''எறும்புச் சகோதரர்களே! சகோதரிகளே! இந்த உலகத்தில் நமக்கு பெரிய எதிரி எது என்று கேட்டால் அது யானை தான்!

நாம் எல்லோரும் சேர்ந்து கூட்டமாக எங்காவது போய்க் கொண்டிருப்போம்.அப்போது திடீரென்று ஒரு யானை வந்து நம்மீது காலை வைத்தால் என்ன ஆகும்? ஆயிரக்கணக்கான நமது தோழர்கள் இறந்து விடுவோம். இதைத்தடுப்பதற்கு என்ன வழி? என்பதைப் பற்றி நாம் யோசிக்க வேண்டும்" என்றார்.

அடுத்த படியாக ஒரு எறும்பு பிரதிநிதி பேச வந்தார். "நாம் அனைவரும் சேர்ந்து நமது எதிரியான யானையைக் கொல்வதற்கு ஒரு வழியைக் கண்டு பிடிக்க வேண்டும்" என்று கூறிவிட்டு அமர்ந்தார். அதற்குப் பின் அந்த எறும்புகள் பல குழுக்களாகப் பிரிந்து ஆலோசனை செய்தன. கடைசியில் ஒரு முடிவுக்கும் வந்தன. அதாவது அவர்களுக்குள் ஒரு அகில உலகத்தலைவரைத் தேர்ந்தெடுப்பது- அந்தத் தலைவர் கடவுளை வேண்டித்தவம் செய்வது- கடவுள் வந்ததும் அவரிடம் ஒருவரம் வாங்குவது அதாவது நாம் யானையைக் கடித்தால் அதுசாகவேண்டும் என்ற வரம்.இது தான் அவர்கள் எடுத்த முடிவு.

உடனே மாநாட்டில் அந்தத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. எல்லா எறும்பும் சேர்ந்து ஒரு தேர்தலை நடத்தினார்கள். ஒரு தலைவனைத் தேர்ந்தெடுத்தார்கள்.ஏகப்பட்ட போட்டிக்கு நடுவில் ஒரு தலைவர்தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தலைவராக ஆனவுடன் அந்த எறும்புக்கு ஆணவம் வந்து விட்டது. "எறும்புகளே! உங்களின் ஒரே தலைவன் நான் கடவுளிடம் வரம் வாங்கிக்கொடுக்கவேண்டியது என் கடமை.எப்படிப்பட்டவரம் வாங்கப் போகிறேன் என்பதைக் கொஞ்சம் பொறுத்திருந்துபாருங்கள்" என்றது. நீண்ட காலம் தவமிருந்தது அந்தத் தலைவர் எறும்பு.

ஒரு நாள் கடவுள் காட்சிகொடுத்தார். "எறும்பே... உன் தவத்தை மெச்சினேன் என்னவேண்டும் கேள்" என்றார். உடனே அந்த எறும்பு "வேறு ஒன்றுமில்லை நான் கடித்தால் சாகவேண்டும் அவ்வளவுதான்" என்றது. "சரி தந்தேன்" என்று கூறிவிட்டார் கடவுள். வரம் வாங்கியாகிவிட்டது. இந்த எறும்புக்கு ஏகப்பட்ட மகிழ்ச்சி.இருந்தாலும் வாங்கிய வரம் பலிக்கிறதா என்று பரிசோதித்துப் பார்க்க வேண்டுமே ! என்ன செய்வது யாரைக்கடிக்கலாம் என்று யோசனை செய்தது.

எதிரில் வரம் கொடுத்த கடவுள்தான் நின்று கொண்டிருந்தார். "அது தான் வரம் வாங்கிவிட்டேன். இனிமேல் இவர் எதற்கு?" என்று யோசனை செய்தது உடனே அவரையே ஒரு கடி கடித்தது. அவர் உடனே பட்டென்று கையால் ஒரு தட்டு தட்டினார். எறும்பு அப்பாடா என்று கத்திக்கொண்டு சுருண்டு விழுந்துவிட்டது. வலிதாங்க முடியவில்லை.

"என்ன இது ? வரம் பலிக்கவில்லையே நீங்கள் சாக வேண்டாமா? இப்போது நானல்லவா செத்துவிடுவேன் போலிருக்கிறது என்றது எறும்பு.தரையில் கிடந்த படியே கடவுள் சிரித்துக்கொண்டே சொன்னார் "நீ என்ன வரம் கேட்டாய்? நான் கடித்தால் சாக வேண்டும் என்று வரம் கேட்டாய் கொடுத்து விட்டேன் இப்போது நீ கடித்தாய்! சாகப் போகிறாய்" என்றார்.

இந்த எறும்பு எப்படி வரம் கேட்டிருக்கவேண்டும்? நான் கடித்தால் நான்யாரைக்கடிக்கிறேனோ அவர் சாகவேண்டும் என்றல்வா கேட்டிருக்க வேண்டும். ஏன் அது அப்படி கேட்க வில்லைத் தெரியுமா? ஆணவம்! ஆணவம் வந்தால் அறிவு மழுங்கிவிடும். அதனால் அவசரத்தில் அப்படிக் கேட்டு மாட்டிக்கொண்டது.

நமக்கும் அப்படித்தான்... ஆணவம் வந்து விட்டால்... அறிவு சரியாக வேலை செய்யாது. ஒரு இடத்தில் எறும்புகள் எல்லாம் வரிசையாகப் போய்க்கொண்டிருந்ததாம். அந்த வழியாக ஒரு ஆண் யானையும் ஒரு பெண்யானையும் வந்திருக்கிறது. எறும்புகள் குறுக்கே செல்வதைப் பார்த்ததும். பெண் யானை நின்று விட்டது. ஆண் யானையைப் பார்த்து நீங்கள் கொஞ்சம் நில்லுங்கள் என்றது.

"ஏன் நிற்கச் சொல்கிறாய்?" என்று கேட்டது அது.பாவம் எறும்புகள்... அதெல்லாம் போகட்டும்... தவறுதலாக நாம் மிதித்து விடக்கூடாது அல்லவா?" என்றது பெண் யானை. "சரி வா.... அந்தப்பக்கமாக விலகிப்போய்விடுவோம்!" என்று கூறி ஆண் யானை பெண்யானையை அழைத்துக்கொண்டு வேறு பக்கமாக ஒதுங்கிச் சென்றது.

இதைப்பார்த்துவிட்டு ஊர்ந்து போய்க்கொண்டிருந்த எறும்புகளில் ஒன்று இன்னொரு எறும்பிடம் கூறியதாம் "பார்த்தாயா நாம் கடித்து விடுவோம் என்று பயந்து கொண்டு அந்த இரண்டு யானையும் விலகி ஓடுகிறது" என்றது. அதற்கு இன்னொரு எறும்பு "பாவம் யானைகள் பிழைத்துப்போகட்டும் விடு' என்றது.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

இந்தியாவின் இராணுவ உதவிகள் தமிழரை அழிக்கவே பயன்படும்

மன்மோகன்சிங்கிடம் வைகோ சுட்டிக்காட்டு

(சென்னை)

அயல் நாடான இலங்கையுடன் எந்தவிதமான பாதுகாப்பு ஒப்பந்தத்தைத்தையும் இந்தியா செய்து கொள்ளக் கூடாது என மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வை.கோபால சாமி வலியுறுத்தியுள்ளார்.

இந்தியப்பிரதமர் மன்மோகன்சிங்கை கடந்த ஞாயிற்றுக் கிழமை புதுடில்லியில் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்திய போதே மன்மோகன் சிங்கிடம் வை.கோபாலசாமி இவ்விடயத்தை வலியுறுத்தினார்.

இலங்கையுடன் எந்தவிதமான பாதுகாப்பு ஒப்பந்தத்தையும் இந்தியா செய்யமாட்டாது என இந்தியப் பிரதமர் முன்னர் உறுதியளித்திருந்தார்.

ஆனால அண்மையில் கொழும்பு வந்திருந்த வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங் இலங்கையுடன் விரைவில் பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளதாக தெரிவித்திருந்தார்.

நட்வர்சிங்கின் கருத்து இந்திய அரசின் கருத்தாக இருக்கும் என நம்பவில்லை எனவும் முன்னர் தாங்கள் அழித்த உறுதிமொழிகளிலிருந்து விலகிவிடக்கூடாதெனவும் அச்சந்திப்பில் வை.கோபால சாமி வலியுறுத்தினார்.

மேலும் இலங்கைக்கு இந்தியா வழங்கும் இராணுவ உதவிகள் தமிழ் மக்களை அழிக்கப்பயன் படுமென்பதையும்,முன்னர் இடம்பெற்ற இவ்வாறான சம்பவங்களையும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

(ற-8)

திருமலை புத்தர் சிலை விவகாரம் கடற்படைத் தளபதி இடமாற்றம்

(கொழும்பு).

திருமலை ஸ்ரீலங்கா கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் சரத் வீரசேகர கொழும்பிற்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

திருமலையின் புதிய கடற்படைத்தளபதியாக ரியர் அட்மிரல் சரத் ரட்ணகீர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார். கொழும்பு கடற்படைத் தலைமையகத்தின் கிழக்குப் பிராந்திய கட்டளைத் தளபதியான ரியர் அட்மிரல் ரண்டகீர்த்தி திருமலைக்கு இடமாற்றப்படுவதனால் ஏற்படும் வெற்றிடத்திற்கே சரத் வீரசேகர நியமிக்கப்படுகிறார்.

ரியர் அட்மிரல் சரத் வீரசேகர கடந்த பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி திருமலை கடற்படை கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டார். அதற்கு முன்னர் அவர் கொழும்பு கடற்படைத்தலைமையக நடவடிக்கை பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றினார்.

திருமலையில் நிறுவப்பட்ட புத்தர் சிலைக்குப் பாதுகாப்பு வழங்க கடற்படை வீரர்களை நியமித்தமை ஹர்த்தால் காரணமாக மூடப்பட்டிருந்த திருமலை எரிபொருள் நிலையங்கள், வங்கிகள், அரச காரியாலயங்கள் போன்றவற்றைத் திறக்கச் செய்தமை உட்பட பல விடயங்கள் தொடர்பாக எழுப்பப்பட்ட பிரச்சினைகளாலேயே இவர் கொழும்பிற்கு இடமாற்றப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

திருமலை திடீர் புத்தர் சிலை விவகாரத்தில் பேரினவாத குழுக்களுக்கு உறுதுணையாக சரத் வீரசேகர செயல்பட்டுவந்துள்ளதாகவும் இவர்தான் திருமலை புத்தர் சிலை பிரச்சினைக்கு காரணமானவர் என்றும் ஸ்ரீலங்கா புலனாய்வுத்துறையினர் ஜனாதிபதிக்கு தகவல் அனுப்பியதாகவும் கூறப்படுகின்றது.

இதையடுத்தே ஜனாதிபதி சந்திரிகா இந்த நடவடிக்கையை மேற்கொண்டார் என்று கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

சரத் வீர சேகரவுக்கு பாதுகாப்பு அமைச்சு விளக்கம் கேட்டு நோட்டிஸ் அனுப்பியது.முப்படைத் தளபதி அட்மிரல் சந்தகிரி இது தொடர்பாக சரத் வீரசேகரவிடம் விசாரணையும் நடத்தினார். இந்த விசாரணை விவரங்கள் பாதுகாப்பு அமைச்சிடம் தெரிவிக்கப்பட்டன.இதன் பின்னரே சரத் வீரசேகர இட மாற்றம் செய்யப்பட்டதாகவும் அச்செய்திகள் தெரிவிக்கின்றன. (ந)

பிரிவினையில்லா நாட்டைக் கட்டியெழுப்ப சகல மக்களும் உறுதி பூணவேண்டும்

-ஜனாதிபதி வலியுறுத்து

(கொழும்பு)

பிரிவினை இல்லாத நாடொன்றைக்கட்டி யெழுப்புவதற்கு இலங்கை மக்கள் அனைவரையும் உறுதி பூணுமாறு பொசன் நோன்மதி தினச் செய்தியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வலியுறுத்தியுள்ளார்.

20 வருடகால யுத்தத்தினால் ஏற்பட்ட பாதிப்பிலும் பார்க்க கூடுதலான பாதிப்பை நாட்டிற்கு ஏற்படுத்திய சுனாமி அனர்த்தம் சிங்களவர்கள், தமிழர்கள் முஸ்லிம்கள் என்ற பாகுபாடின்றி சல இன மக்களையும் பாதிப்புக்குள்ளாக்கியுள்ளது.

புத்தபகவான் சமாதானம், பேச்சுவார்த்தை ஆகியவற்றின் மூலம் பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாம் என்பது எடுத்துக்காட்டியுள்ளார்.

இன்று கூட எங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப் புத்த பெருமானின் இந்தப் போதனையை நாம் கடைப்பிடிப்பது பொருந்தும் என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

மேலும் 20 வருட கால அநாவசியமான யுத்தம் உயிர்களுக்கும், சொத்துக்களுக்கும் பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால் இந்த யுத்தத்தினால் எவருமே வெற்றியடையவில்லை பௌத்த மதத்தில் இன,மத, சாதி வேறுபாடுகளுக்கு இடமே இல்லை என்றும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அச்செய்தியில் வலியுறுத்தியுள்ளார். (ற-2)

மேல்மாகாண முதலமைச்சர் நியமனத்தில் சிக்கல் நீலை

(கொழும்பு)

மேல் மாகாண சபை முதலமைச்சர் ரெஜினோல்ட் கூரே தனது பதவியை இராஜினாமா செய்துள்ளதால் புதிய முதலமைச்சர் ஒருவரை அந்த இடத்திற்கு நியமிப்பதில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. எந்தவொரு அரசியல் கட்சிக்கும் பெரும்பான்மையின்மையே இதற்குக் காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாண சபையில் ஆளும் கட்சிக்கு 59 ஆசனங்கள் கிடைத்திருந்தன எனினும் ஜே.வி.பி உறுப்பினர்கள் 23 பேரும் நேற்று முன்தினம் திங்கட் கிழமை எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்ததனால் ஆளும்கட்சி பெரும்பான்மையை இழந்துள்ளது.

இந்நிலையில் மாகாண சபையில் பெரும்பான்மை இருக்கும் கட்சியின் உறுப்பினர் ஒருவரை முதலமைச்சராக நியமிக்குமாறும் அதற்கு முன்னர் மாகாண சபையில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சிகளினதும் தலைவர்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்துமாறும் மேல்மாகாண சபையின் ஐக்கிய தேசியக் கட்சிக் குழுத்தலைவர் கீர்த்தி சிறி கஹாட் டபிட்டிய ஆளுநர் அலவி மௌலானாவிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மாகாண சபையில் ஆளும் கட்சி பெரும்பான்மையை இழந்துள்ளதால் ஐக்கிய தேசியக்கட்சிக்கே தற்போது பெரும்பான்மை உள்ளது.அதனால் பொது ஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர் ஒருவரை முதலமைச்சர் பதவிக்கு நியமிக்காது பெரும்பான்மை உள்ள கட்சியின் உறுப்பினர் ஒருவரை அந்தப் பதவிக்கு நியமிக்குமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ச-4)

வெடிபொருட்களுடன் படகு மன்னாரில் கைப்பற்றப்பட்டது

(மன்னார்)

மன்னாரில் ஜெலக்னைட் குச்சிகள் மற்றும் வெடிக்க வைக்கும் உபகரணங்கள் இருந்த டிங்கி படகொன்றை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

மன்னார் சவுத்பார் கடற்பிரதேசத்தில் ஜெலிக்னைட் குச்சிகள் 390 வெடிக்க வைக்கும் குச்சிகள், 5 ஜி.பி.எஸ். இயந்திரம் ஒன்று மற்றும் 55 லீற்றர் மண்ணெண்ணையுடன் டிங்கிப் படகொன்றை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன் அந்தப் படகில் இருந்த சேகு அன்ரன் என்பவரையும் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரையும் கைப்பற்றப் பட்ட பொருட்களையும் கடற்படையினர் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைந்துள்ளனர். மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ற)

தமிழகப் பயணம்

பயணக் கட்டுரை

21 சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள மனுநீதி கண்ட சோழனின் சிலை, தமிழனின் நீதி தவறா ஆட்சியை உணர்த்துவதாக இருந்தது. தனது மகன் வீதிவிடங்கன் தேரில் சென்றபோது, ஆன்கன்றொன்று தேர்க் காலில் அகப்பட்டு இறந்து போனது. தன் பிள்ளையின் இழப்பால் துயருற்ற தாய்ப்பசு தனக்கு நேர்ந்த கதியை மனு நீதிச் சோழனுக்கு எடுத்துரைப்பதற்காக அரண்மனை வாயிலில் கட்டப்பட்டிருந்த ஆராய்ச்சி மணியை தன் வாயால் இழுத்து அடித்தது என்ற கதையைப் படித்திருக் கின்றோம்.

மாடு மணி அடித்ததன் காரணத்தை வினவிய மன்னன் மனுநீதி, கன்றை இழந்த பசுவுக்கு நீதி வழங்கினான். தன் மகன் வீதிவிடங்கனைத் தரையில் கிடத்தித் தானே தேரோட்டிச் சென்று தேர்க்காலை ஏற்றி வீதிவிடங்கனைக் கொன்றான். அவனின் நீதி தவறா நெறி கண்டு மகிழ்வுற்ற இறைவன், இறந்த கன்றையும், வீதிவிடங்கனையும் உயிர் பெற வைத்து மனுநீதிச் சோழனின் நீதி தவறா ஆட்சிநெறியை உலகறியச் செய்தனன் என்பது வரலாறு.

மகனென்றும் பாராது நீதி வழங்க வேண்டும் என்பதை மனுநீதிச் சோழனின் சிலை உணர்த்திநின்றது. மனுநீதியின் தீர்ப்பு சென்னை உயர்நீதி மன்றத்தில் எந்தளவு தூரம் கடைப்பிடிக்கப்படு கின்றதோ இல்லையோ ஆனால் உலகில் யாராலும் செய்ய முடியாத நீதி தவறாத ஆட்சியை நம் தமிழ்வேந்தர்கள் செய் தார்கள் என்ற வரலாற்றுப் பெருமையை உயர்நீதிமன்றத்தில் வைக்கப்பட்டுள்ள மனுநீதிச் சோழனின் சிலை பறைசாற்றி நிற்கின்றது.

உயர்நீதிமன்றில் மியூசியம்

மனுநீதிச் சோழனின் சிலையில் சில நேரங்களைச் செலவிட்ட நான் உயர் நீதிமன்றத்திலுள்ள மியூசியத்தைப் பார்ப்பதற்காக மீண்டும் நீதிமன்றப் படி களில் ஏறினேன்.

1801 ஆம் ஆண்டு பிரிட்டிஷாரால் ஆரம்பிக்கப்பட்ட சென்னை உயர்நீதி மன்றத்தின் வரலாறுகளை - ஆவணங் களைப் பாதுகாப்பதற்காக நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் மியூசியம் ஒன்றை இந்த ஆண்டில் அமைத்துள்ளார்கள். கட்டணம் இன்றிப் பார்க்கக் கூடியதாக அமைக்கப்பட்டுள்ள இந்த மியூசியம் நீதிமன்றின் வரலாற்றைப் பேசுகின்றது.

பிரிட்டிஷாரின் காலத்தில் உயர்நீதி மன்றத்தை நிர்மாணிப்பது தொடர்பாகப் பரிமாற்றப்பட்ட கடிதங்கள், முதலாவது நீதிபதியாக இருந்தவர், ஓய்வெடுத்துக் கொண்ட கட்டில், நீதிபதிகள் அமர்ந்த கதிரைகள், நீதிமன்றத்தில் விசாரணை நடைபெறும் போது மன்று இருக்கக் கூடிய மாதிரித் தோற்றம், நீதிபதிகளின் உருவப்படங்கள், அவர்களின் வரலாறு கள் போன்ற பல்வேறு விடயங்கள் அந்த மியூசியத்தில் பாதுகாக்கப்பட்டுள்ளன.

இற்றைக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் பிரிட்டிஷ் ஆட்சியாளரால் மைப் பென்னால் (Ing Pen) எழுதப்பட்ட கடிதங்கள் மிகப் பக்குவமாகப் பாது காக்கப்பட்டிருக்கும் விந்தை கண்டு வியத்துப் போனேன்.

ஆவணப்படுத்துவதில் வல்லவர்கள்

எமக்கும், தமிழகத்தவர்களுக்கு மிடையே இருக்கக் கூடிய மிகப் பெரிய தொரு வேறுபாடு, நாம் எமது வரலாறு களைப் பேணுவதில் - அவற்றைப் பாது காப்பதில் கவனம் செலுத்துவதில்லை. தமிழகத்தில் அப்படியல்ல. அவர்கள் தமது வரலாறுகளை ஆவணப்படுத்திக் கொள்வதில் வல்லவர்கள். இது தமிழ கத்தின் பெருமைக்கு அடிப்படையாக வுள்ளது.

யாழ்ப்பாணத்தில் ஓர் புத்தகத்தை எழுதி வெளியிடுவதென்றால் போதுமடா சாமி என்றாகிவிடும்.

ஆனால் தமிழகத்தில் அப்படியல்ல. அங்கு புத்தகத்தை எழுதுவது, அச்சிடு வது, வெளியிடுவது எல்லாமே மிகச் சுலபமான விடயங்கள்.

இதனால் அங்கு அறிவியல் நூல்களும், ஆன்மீக வழிகாட்டிகளும், அரசியல் சஞ் சிகைகளும் நிறைந்து வழிகின்றன.

சென்னை மாநகரின் வீதிகளில் புத்த கங்களைக் குவித்து வைத்து விற்பனை செய்வதும், அதை மக்கள் கூட்டம் பெற் றுச் செல்வதும் தமிழகத்தின் வாசிப்புப் பழக்கத்திற்கு நல்லதோர் உதாரணம்.

சமையல் கலைமுதல், மருத்துவம் வரையான மிகப் பெறுமதிவாய்ந்த புதிய, பழைய புத்தகங்களை வீதியில் வைத்து மிகக் குறைந்த விலையில் விற்பனை செய்வதனால் தானோ! சென்னை மாநக ரின் அறிவியல் இமயத்தின் உச்சியைத் தொடுகின்றது! என எண்ணத் தோன்று கின்றது. நாமெல்லாம் பழைய புத்த கங்களை வீட்டிற்குள் பூட்டி வைத்துக் கறையானுக்கு நிவாரண உணவாக வழங்க, அங்கு தாம் கற்ற அறிவியல் நூல்களை மற்றவர்களும் படிப்பதற்கா கப் பரிமாற்றிக் கொள்ளும் அற்புதம் ஆச்சரியமானதுதான்.

சென்னையில் ஓடும் இரட்டைத்தட்டு பஸ்

சாலையோரத்தில் புத்தக விற்பனை

'சாலையோரப் புத்தக விற்பனையால் ஏழை மாணவர்கள் பெரிதும் நன்மை யடைகின்றார்கள்' எனப் புத்தக வியா பாரியொருவர் எனக்குக் கூறிய அந்தச் செய்தி என்னுள் இப்போதும் ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

நம் மண்ணிலும் சாலையோரப் புத் தக விற்பனைகள் வந்தால் நமது மாண வர்களும் நன்மையடைவார்களல்லவா? இந்த நினைவுகளோடு சென்னை உயர் நீதிமன்றத்தின் வளாகத்தை விட்டு வெளியேறினேன்.

தினமணி அலுவலகத்திற்குச் சென்று நீதிமன்றச் செய்திகளை எழுதிக் கொடுத் தால், அன்றைய கடமை நிறைவடையும் என்ற மனத்திருப்தியோடு, பஸ்நிலை யத்தை நோக்கி நடக்கத் தொடங்கினேன்.

தினமணிப் பத்திரிகை அமைந்துள்ள அண்ணா சாலைக்கு பஸ்சேவை தாராள மாக இருந்தாலும், சென்னை மாநகரில் ஓடித் திரிகின்ற இரட்டைத் தட்டு பஸ்ஸில் (Double Decker) பயணம் செய்ய வேண்டுமென்பது எனது அவா.

யாழ்ப்பாணத்திலும் முன்னர் இரட் டைத்தட்டு பஸ் இருந்தாலும், அது என் அறிவுக்குத் தெரியாத காலம் என்பதால்,

என். விஜயன்

சென்னையில் ஓடித்திரியும் இரட்டைத் தட்டு பஸ்ஸில் ஏறிக்கொண்டேன்.

பஸ் பயணத்தை தொடர்ந்தபோது, என் தாயகத்தின் சிந்தனையும் என்னுள் வேகமெடுத்தது.

யாழ்ப்பாணத்தில் ஒரு காலத்தில் டிங்கிரி - சிவகுரு என்ற இருவர் நடத்திய நகைச்சுவை நிகழ்ச்சியில் ' அண்ணே! இரட்டைத்தட்டு பஸ்ஸில், கீழ்த்தட்டில் இருக்கிற டிறைவர் பீறேக் பிடிச்சாலும் மேல்த்தட்டு பஸ் ஓடிக்கொண்டிருக்கும் தானே... அண்ணே!...' என்ற அந்த நகைச்சுவை, நினைப்புவர என்னையறி யாமலே எனக்குள் சிரிப்பு. அந்தச் சிரிப்பை விரும்பாதது போல நடத்துநரின் மணியோசை தினமணியை ஞாபகப் படுத்த, இரட்டைத்தட்டு பஸ்ஸில் இருந்து இறங்கிக் கொண்டேன். (வளரும்)

வவு.கமநல சேவை உயர் அதிகாரிகள் குழு வடமராட்சிக்கு விஜயம்

(மருதங்கேணி)

வவுனியா கமநல சேவை உயர் அதிகாரிகள் குழுவொன்று கடந்த வெள்ளிக்கிழமை காலை வடம ராட்சிக்கு விஜயம் செய்தது.

வவுனியா கமநல சேவை ஆணை யாளர் க.தெய்வேந்திரம் தலை மையிலான இக் குழுவில் வவுனியா மாவட்ட கமக்கார வங்கிப் பொறுப் பாளர் சுஜாதா சிவபாலசுந்தரமும் அடங்குவார்.

இவர்கள் புலோலி கமநல சேவை காரியாலயத்திற்கு விஜயம் செய் தனர். இவர்களை பெரும்பாக உத்தி யோகத்தர் ஆர். உருத்திரேஸ்வரன் வர வேற்று கமக்கார வங்கியின் செயற் பாடுகள் குறித்து விளக்கிக் கூறினார்.

பின்னர் அக் குழுவினர் வடமராட் சியிலுள்ள விவசாயத் திட்டங்களைப் பார்வையிட்டனர்.

ஆணையாளர் க. தெய்வேந்திரம் தமது விஜயம் குறித்து கருத்துத் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் விவசாய வங் கிகள் வெற்றிகரமாக இயங்கி வரு கின்றதைப் பாராட்டினார்.

வவுனியா மாவட்டத்தில் கமக் கார வங்கி இன்னமும் திறக்கப்பட வில்லை எனவும் இம் மாத கடைசியில் இரு வங்கிகள் திறக்கப்படுவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக வும் அவர் தெரிவித்தார்.

மேலும் வவுனியா கோவில் குளத் திலும் பம்பை மடுக் குளத்திலும் இரு வங்கிகள் திறக்கப்படவுள்ளதாகவும் யாழ். மாவட்டத்தில் இவ் வங்கிகள் எவ் வாறு செயல்படுகிறதென்பதை அறி வதற்கான முன்னோடியாகவே இவ் விஜயத்தை மேற்கொண்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-35)

பொதுக்கட்டமைப்புக்கு 65 % மக்கள் ஆதரவு சமாதானச் செயலகப் பணிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

உத்தேச சுனாமி நிவாரணக் கட்ட மைப்பை 65% மானோர் அங்கீகரிப்பதாக அரசாங்கத்தின் சமாதானச் செயலகம் தெரிவித்துள்ளது. சோஷியல் இன்டி கேற்றர் நிறுவனம் நடத்திய ஆய்வில் 72% மான இலங்கையர்கள் அரசாங்கத் திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த் தைகள் விரைவில் ஆரம்பமாக வேண் டும் என்பதை விரும்புவதாக சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் கலாநிதி ஜெயந்த தனபால தெரிவித்துள்ளார்.

மொறட்டுவ, சர்வோதய சமூக மண்டபத்தில் நடந்த வைபவமொன் றில் உரையாற்றும்போதே இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

இந்த நிகழ்வில் பலதுறைகளில் திறமை காட்டிய பலருக்கு சர்வோதய நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் ஊடாக விருதுகள் வழங்கப்பட்டன.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய தனபால, உத்தேச சுனாமி நிவாரணக் கட்டமைப்பு நகல்பற்றி உள்ளூர் ஊடகங் கள் தவறான செய்திகளை வெளியிடு கின்றன என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த அபிவிருத்தித் திட்டத்தை அமுல் செய்யாவிட்டால் சர்வதேச சமூகம் விடுதலைப்புலிகள் மீது அனு தாபம் கொள்வதைத் தவிர்க்க முடியாது போகும் எனத் தெரிவித்துள்ள சமாதானச் செயலகப் பணிப்பாளர்,

உத்தேசக் கட்டமைப்பின் ஊடாக சுனாமியால் பாதிக்கப்பட்ட மாவட்டங் களில் வசிக்கும் சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பேணிப் பாதுகாக்க அரசாங்கம் திடசங்கற்பம் பூண்டிருக் கிறது எனவும் கூறியுள்ளார். (அ-2)

மாவட்ட செயலாளர்களுக்கு வாகன வசதி

(கொழும்பு)

மாவட்ட செயலாளர்களுக்குப் புதி தாக வாகனங்களை வழங்குவது குறித்து பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு கவனம் செலுத்தி வருகிறது.

போக்குவரத்துப் பிரச்சினைகள் காரணமாக மாவட்ட செயலாளர் களும் பிரதேச செயலாளர்களும் அன்றாட கடமைகளைச் சரிவர நிறை வேற்றுவதில் சிக்கல்கள் எழுந்துள்ள தாக அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதையடுத்து இப் பிரச்சினை குறித்து திறைசேரியுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக அமைச்சின் செயலாளர் டி.திஸா நாயக்க தெரிவித்தார்.

இப் பேச்சுவார்த்தையை அடுத்து மாவட்ட செயலாளர்களினதும் பிர தேச செயலாளர்களினதும் பாவனைக் காக 125 வாகனங்களைக் கொள்வ னவு செய்வதற்கு அனுமதி கிடைத் துள்ளதாக அவர் கூறினார்.

அவற்றில் மாவட்ட செயலா ளர்களுக்கு 100 வாகனங்கள் வழங் கப்படவுள்ளதாகவும் பிரதேச செய லாளர்களுக்கு அவர்களது அலு வலக நடவடிக்கைகளுக்காக 25 காப் வாகனங்கள் வழங்கப்படவுள்ள தாகவும் அவர் மேலும் தெரிவித் தார். (து-2)

சனிப் பெயர்ச்சி

27.06.2005ஆம் திகதி சனிபகவான் மிதுன ராசியினின்று கடக ராசிக்குச் செல்கிறார். இந்த சனிப் பெயர்ச்சியால் 12 இராசிக்கும் 27 நட்சத்திரங்களுக்கும் உரிய பலன்களும் கவனிக்க வேண்டிய பரிகாரங்களும் இங்கே தரப்படவுள்ளன.

கடகம்

அறிவாற்றலுடன் கற்பனைவளம் அதிகம் கொண்ட கடக ராசி அன்பர்களே!

உங்களுக்கு வாழ்க்கை நிலை சற்று கரடுமுரடாக இருக்கும். ஏழரைச்சனியில் ஜென்ம சனி தொடங்க உள்ளதால் நீங்கள் சற்று அடக்கி வாசிப்பது நல்லது. சனி வரும் 27.6.2005இல் 12லிருந்து ஜென்மராசிக்கு வர உள்ளதால் உடல் ஆரோக்கியத்தில்கூட நீங்கள் கவனம் செலுத்த வேண்டும். வேலையில் மற்றவர்களின் ஒத்துழைப்பு குறையும். வேலைப்பளு அதிகரிக்கும்நிலை உண்டாகும். ஜென்மச்சனி நடைபெறும் இக்காலத்தில் குருபகவானும் உங்கள் ராசிக்கு 19.09.2005முடிய 3ஆம் வீட்டிலும் அதன் பிறகு 20.10.2006முடிய 4ஆம் வீட்டில் சஞ்சரிக்க இருப்பது மேலும் சோதனைதரும் அமைப்பாகும்.

பிரதான கிரகங்களை ஆராய்ந்து பார்க்கின்றபோது 21.10.2006முதல் 16.11.2007முடிய குரு 5இல் சஞ்சரிக்க கூடிய காலம்தான் உங்களுக்கு சாதகப் பலனைத்தரும் நிலையாகும். சனியின் நட்சத்திரமான ஏழரைச்சனி அதிக இன்னல்களை கொடுக்காது என்றாலும் குரு பகவானும் அனுகூலமற்று உள்ளதால் எந்த ஒரு செயலையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்து செய்வது உத்தமம். கடன் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதால் செலவுகளை குறைப்பது நல்லது. வரவிற்குமிஞ்சிய செலவு வரும் காலங்களில் இருக்கும் சோதனையை கண்டு அஞ்சாமல் இருநதால் எதிர்காலத்தில் ஏற்றமிகு பலனை அடையலாம்.

உடல் ஆரோக்கியம்: உடல் ஆரோக்கியம் மிகவும் பாதிக்கும். ஜலத் தொடர்பானவைகளால் அதிகமான மருத்துவச் செலவுகள் உண்டாகும். சிலருக்கு சர்க்கரை ரத்த அழுத்த நோய்கள் கடுமையாக அதிகரிக்கும். மனைவி வழியிலும் கர்ப்பக்கோளாறுகள் மற்றும் சிலருக்கு பிரசவ சிக்கல்களும் உண்டாகும். பிள்ளைகள உங்கள் பேச்சை கேட்டு நடக்கமாட்டார்கள். சோர்வாகவும் சோம்பலாகவும் காட்சியளிப்பார்கள். எதிலும் எச்சரிக்கை தேவை.

கொடுக்கல் வாங்கல்: கொடுக்கல் வாங்கலில் நீங்கள் திட்டமிட்டபடி செயல்பட முடியாது. பலவிதமான சிக்கல்களில் சிக்கிக்கொள்வீர்கள். பொருளாதார நிலையிலும் தனவரவுகள் முடங்கும் கைப்பொருள் விரயமாகும். சில நெருக்கமானவர்களே துரோகம் செய்யத் துணிவார்கள். கடன்தொல்லைகளும் அசையாச் சொத்து வகையில் செலவுகளையும் எதிர்கொள்ள நேரிடும். வம்பு வழக்குகளில் இழுபறியும் வண்டி வாகனம் மூலம் செலவையும் ஏற்படுத்தும்.

தொழில் வியாபாரம்: தொழில் வியாபாரநிலையில் அதிகமான நெருக்கடி உண்டாகி போராட வேண்டிய சூழ்நிலை உண்டாகும். இலாபம் இல்லாத நிலையும் பொருள் தேக்கமும் கடன் நெருக்கடிகளும் ஏற்படும். அரசு மூலம் எதிர்பாராத சோதனைகளை ஏற்படுத்தும். தொழிற்கருவிகள் பழுதடைவதால் உற்பத்தியும் பாதிக்கும். தொழிலாளர்களுக்குள் போட்டி, பொறாமை உணடாகி பல நல்ல வேலையாட்கள் விலகிவிடுவார்கள். போனஸ் கேட்டு தொல்லைதருவார்கள். கூட்டுத்தொழிலிலும் சிலர் பிரிவை சந்திப்பார்கள்.

உத்தியோகஸ்தர்களுக்கு: பதவி ஊதிய உயர்வுகள் தடைப்படும். அதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாக நேரிடும். அடிக்கடி உடல் நலம்கெடும். விடுப்பு எடுத்து வேலைபளுவை கூட்டிக்கொள்வீர்கள். உடன் ஊழியர்களிடையே அனுசரித்து போகாமல் போட்டி பொறாமைகளால் கலகம் உண்டாகும். எதிர்பாராமல் விருப்பமில்லாத இடத்திற்கு மாறுதல் ஏற்பட்டு குடும்பத்தைவிட்டு பிரிந்துவாழ நேரிடும். படித்துவிட்டு வேலை தேடுபவர்களுக்கு நல்ல நிரந்தர வேலை அமையாது.

பெண்களுக்கு: உடல் நலனில் அதிகமான அக்கறை செலுத்தவேண்டும். சிலருக்கு அறுவைச் சிகிச்சை செய்ய நேரிடும். கணவன் மனைவி இடையே சண்டை சச்சரவுகளும் சிலர் சிலகாலம் பிரிந்து வாழவும் நேரிடலாம். திருமண சுபகாரிய முயற்சிகளும் தடைப்படும். உற்றார் உறவினர்கள் கலகமூட்டுவார்கள். உத்தியோக நிலையில் மேலதிகாரிகளால் மன உளைச்சல் ஏற்படும்.

மாணவ மாணவியருக்கு: செயயாத தவறுக்கு தண்டனையை அடையும்படி உடன் இருக்கும் தீய நண்பர்கள் வழிவகுத்து விடுவார்கள். எனவே யாரிடமும் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். வெளி மாநிலங்களிலிருந்துவந்து தங்கிப்படிக்கும் மாணவர்கள் சிந்தித்து எதிலும் செயல்படவேண்டும். குறிப்பாக பெணகள் விஷயத்தில் கேலி செய்வதன் மூலம் சில சங்கடங்களை அடைய நேரிடும். மதிப்பெண் குறையும். சோர்வாகக் காணப்படுவீர்கள்.

கலைஞர்களுக்கு: புசம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு சனி சற்றே ஏற்றம் ஏற்படுத்துவார். மற்றவர்களுக்கு தொழில் ரீதியாக நல்ல வாய்ப்புகளும் கைநழுவும். மறைமுக எதிரிகளால் பெரிய மனிதர்களை பகைத்துக் கொள்ள நேரிடும். அலைச்சலும்தொல்லைகளும் வெளியூர் பயண படப்பிடிப்பில் மந்தமான நிலையும் காணப்படும். தனவரவுகள் தடைப்படும். வீண் வம்பு வழக்குகளில் தலையிட நேரிடும்.

பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு: அரசியலில் வெளிவட்டாரப் பழக்கத்தில் கவனமுடனும் எச்சரிக்கையுடனும் செயல்படாவிட்டால் தேவையில்லாத பிரச்சினைகளும் விரோதமும் உண்டாகும். மேடைப் பேச்சில் பாரையும் எடுததேன் கவிழ்த்தேன் என பேசுவது ஆபத்தை விளைவிக்கும். தொண்டர்கள் மற்றும் மக்கள் ஆதரவு குறையும்.

தொழிலாளிகளுக்கு: தொழிலாளிகளுக்குள்ளாகவே போட்டி பொறாமைகள் நிலவும். ஒரு வேலையை இருமுறைசெய்ய நேரிடும். விழுந்து விழுந்து பாடுபட்டாலும் அதனை உபயோகிக்க முடியாதபடி வீண் செலவுகள் ஏற்படும். சிறு சிறு விபத்துக்கள் ஏற்படலாம்.

சனிபகவான் குரு சாரத்தில் புனர்பூசத்தில்
27.06.2005முதல் 21.07.2005வரை

இக்காலத்தில் உங்களின் உடல்நலம் அதிகமாக பாதிப்படையும். ஜலத் தொடர்பான உடல் உபாதைகள் அதிக மருத்துவச் செலவுகளை ஏற்படுத்தும். மனைவிக்கும் கர்ப்பக் கோளாறுகள் பிரசவ சிக்கல்கல்களை எதிர்கொள்ள நேரிடும். பிள்ளைகளால் மனச்சஞ்சலம் உண்டாகும். குடும்பத்தில் கணவன் மனைவிஇடையே ஒற்றுமை குறையும் உற்றார் உறவினர் நண்பர்கள் விரோதமாவார்கள். சிலருக்கு திருமண சுபகாரியம் இடையுறுகளை ஏற்படுத்தும். பொருளாதார நிலையில் நெருக்கடிகளும் கடன் தொல்லைகளால் அவமானமும் படு மந்தமாகவும் அரசு மூலம் திடீர் சோதனைகளையும் ஏற்படுத்தும். போட்டி பொறாமைகளால் கூட்டுத் தொழிலில் பிரிவு உண்டாகும். வெளிநாட்டு வகையில் சிக்கல்கள் கொடுக்கல் வாங்கலில் ஏமாற்றப்படும் நிலையும் உண்டாகும். மாணவர்கள் மந்தமடைவார்கள் உத்தியோகஸ்தர்கள் சோர்வடைவார்கள்.

சனிபகவான் சனி சாரத்தில் பூசத்தில்
22.07.2005முதல் 19.11.2005வரை

எதிலும் அதிக எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டிய காலமாகும். மனதில் குழப்பமான நிலை அமையும். உடல் நலனில் முழு கவனம் செலுத்த வேண்டும். மனைவி மற்றும் புத்திரர்களால் அதிக மருத்துவச் செலவுகளும் வீண் விரயங்களும் கூடும். உற்றார் உறவினர்களும் பணம் கேட்டு அடிக்கடி சண்டைபோடுவார்கள். திருமண சுபகாரியம் பலவிதமான இடையுறுகளைச் சந்திக்கும். சிலருக்கு கருச்சிதைவு ஏற்படவும் வாய்ப்புள்ளதால் எதிலும் கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் வேலையாட்களால் லாபம் குறையும். கொள்முதல் பொருட்கள் தரம்மற்றவையாக நுகர்வோரின் அதிருப்திக்கு ஆளாகிவிடும். பொருள தேக்கம் உண்டாகி முதல் முடக்கம் ஏற்படும். உத்தியோக நிலையில் மற்றவர்களை அனுசரித்துபோக முடியாதபடி பலவிதமான சிக்கல் உண்டாகும். புதிய வேலையும் கிட்டாது. மாணவர்களின் கல்வியில் மிகவும் மந்தமான நிலை ஏற்படும்.

சனிபகவான் வக்ரகதியில்
20.11.2005முதல் 06.04.2006வரை

இக்காலத்தில் நீங்கள் எதிலும் மிகவும் நிதானமாக செயல்பட்டால் மட்டுமே சிறிதளவு முன்னேற்றம் அடைய முடியும். உடல் நலனில் சற்றே சாதாரண நிலை காணப்படும் மருத்துவச் செலவுகள் குறையும். மனைவி மற்றும் புத்திரர்கள் சற்று சாதகமாக அமைவார்கள். குடும்பத்தில் பொருளாதார நிலையில் சிறு சிறு தடை தாமதம் நிலவினாலும் கடன்களை படிப்படியாக வாங்கலில் நிதானமாக பெரிய தொகைகளில் செலவுபட வேண்டும். உத்தியோக நிலையில் அதிகாரிகளையும் உடன் ஊழியர்களையும் அனுசரித்து போவது உத்தமம். திருமண சுபகாரிய முயற்சியை மேற்கொள்ள முடியும். தொழில் வியாபார நிலையில் படிப்படியாக உயர்வினை அடைய முடியும். புதிய முயற்சிகளிலும் சற்று கவனம் தேவை. மாணவர்கள் கல்வியில் ஏற்றம் அடைவார்கள்.

சனிபகவான் சனி சாரத்தில் பூசத்தில்
07.04.2006 முதல் 27.07.2006வரை

இக்காலம் சாதகமற்றதாகவே அமையும். எடுக்கும் காரியத்தில் தடை உண்டாகும். நெருக்கமானவர்களிடம் பகை உண்டாகும். எந்த ஒரு செயலை செய்வதாக இருந்தாலும் அதிக முறை சிந்தித்துசெயல்பட வேண்டும். உடல் நலனில் மிகவும் எச்சரிக்கைதேவை. மனைவிக்கு மாதவிடாய் கர்ப்பக் கோளாறுகளை ஏற்படுத்தும். பிள்ளைகளால் மனச்சஞ்சலம் உண்டாகும். பொருளாதார நிலை மிகவும் மோசமாகப் பாதிப்படையும் கடன்களால் அவமானப்படவும் நேரிடும். திருமண சுபகாரியம் இடையுறுகளால் நின்று போகும். கணவன் மனைவி இடையே புசல் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் மிகவும் மந்தமான நிலையும் அதிக சோதனைகளும் உண்டாகும். கூட்டுத் தொழிலில் கூட்டாளிகளிடையே பிரிவு உண்டாகும். மாணவர்களின் கல்வியில் மந்தமான நிலை அமையும். விவசாயிகளுக்கு மக்சூல் சேதமாகும்.

சனி பகவான் புதன் சாரத்தில் ஆயிலியம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்
28.07.2006 முதல் 2.12.2006வரை

இக்காலத்தில் மிகவும் போராட்டமான நிலையை அடைய நேரிடும். உடல்நிலையில் பாதிப்புகளை ஏற்படுத்தும். வயிற்றுக் கோளாறுகளும் ஜலம் தொடர்பான வைகளாலும் மனைவி புத்திரர்கள் வழியில் மருத்துவச் செலவுகள் ஏற்படும். வெளியூர் பயணங்கள் அனுகூலமற்றதாக அதிக அலைச்சலை ஏற்படுத்தும். பொருளாதார நிலையில் பணவரவுகள் இருக்காது. பற்றாக்குறையும் கடன் தொல்லைகளும் அதிகரிக்கும். நெருக்கமானவர்களிடம் பகை ஏற்படும். மனதில் குழப்பமும் அமைதியற்ற சூழலும் உண்டாகும். திருமண சுபகாரியம் தடைபடும். கணவன் மனைவி இடையில் சண்டைச் சச்சரவுகள் உண்டாகும். தொழில் வியாபாரநிலையில் பலத்த போட்டி பொறாமைகளை எதிர்கொள்வதோடு லாபம் இருக்காது. அரசின் மூலம் எதிர்பாராத சோதனைகளையும் ஏற்படுத்தும். உத்தியோக நிலையில் அதிக வேலைப் பளுவால் சோர்வடைவீர்கள். அரசியலில் பெயர் புகழ் பாதிப்படையும். மாணவர்கள் மந்தமடைவார்கள்.

சனி பகவான் வக்ரகதியில் சஞ்சரிக்கும் காலம்
03.12.2006முதல் 19.04.2007வரை

இது உங்களுடைய உடைந்துபோன மனதிற்கு உறசாகத்தினை ஏற்படுத்தும் காலமாக அமைந்துவிடும். உடல நலம நல்ல முன்னேற்றம் அடையும. பெண்களுக்கு சுறுசுறுப்பான நிலையும் கர்ப்பக் கோளாறுகள் விலகி புத்திர பாக்கியத்தை ஏற்படுத்தும். மருத்துவச் செலவுகள் விலகும். பொருளாதார நிலையில் சிறப்பான தனவரவுகளால் இழந்த பொருட்களை மீண்டும் பெறுவீர்கள். வண்டி வாகனம் வீடு அமையும். குடும்பத்தில் குதூகலமும் திருமண சுபகாரியமும் சிறப்பாக அமையும். கணவன் மனைவி ஒற்றுமை அற்புதமாக இருக்கும். கொடுககல் வாங்கல் அனுகூலமாகும். வம்பு வழக்கு பைசலாகிவிடும். தொழில் வியாபாரம் கூட்டுத் தொழில் வியாபாரம் கமிஷன் ஏஜன்ஸி காண்டிராக்ட் போன்றவற்றில் சிறப்பான லாபமும் அபிவிருத்தியும் அடைவீர்கள். உத்தியோக நிலையில் தடைபபட்ட பதவி ஊதிய உயர்வுகள் அமையும். மாணவர்கள் சிறப்பாக அமைவார்கள்.

சனிபகவான் புதன் சாரத்தில் ஆயிலியத்தில்
20.04.2007முதல் 05.08.2007வரை

உங்களுக்கு உஷ்ண சமபந்தமான நோய்கள் ஏற்பட்டு மறையும். மனைவி குழந்தைகளின் வழியில் மருத்துவச் செலவுகள் சற்று கூடும். பொருளாதார நிலையில் சிறு சிறு தடைக்கு பின்பு பணவரவுகளை அடைவீர்கள். குடும்ப வாழ்வில் கணவன் மனைவி அனுசரித்துப் போனால் ஒற்றுமை குறையாது. எடுக்கும் முயற்சிகள் சற்று தாமதத்துடன் வெற்றியடையும். எடுக்கும் காரியத்தில் கருத்தாக செயல்பட வேண்டும். தொழில் வியாபாரரீதியாக ஏற்படும் போட்டி பொறாமைகளை எளிதில் சமாளித்து விடுவீர்கள். சிறு சோதனைகளை கண்டு பயம் கொள்ள வேண்டாம். அலைச்சல் சற்று உத்தியோக நிலையில் ஏற்பட்டாலும் அனுகூலப் பலனை அடைகின்ற சூழ்நிலை உண்டாகும். புதிய வேலைவாய்ப்புகள் தாமதித்து கிட்டி அரசியலில் உங்கள் பெயர் புகழை காப்பாற்றிக்கொண்டு மற்றவர்களின் ஆதரவை பெற்று விடுவீர்கள். மாணவர்கள் முயற்சியால் வெற்றிபெறுவார்கள்.

அதிர்ஷ்ட குறிப்புகள

அதிர்ஷ்ட கிழமை: திங்கள், புதன்
அதிர்ஷ்ட நிறம்: வெண்மை பச்சை
அதிர்ஷ்ட தெய்வம்: வெங்கடாஜலபதி
அதிர்ஷ்ட திசை: வடகிழக்கு
அதிர்ஷ்ட கல்: முத்து

(தொடரும்)

ஈழத்தின் தேசிய இனப் பிரச்சினைகள்

கலாநிதி செ.திருநாவுக்கரசு 29

1956 இல் ''சிங்களம் மட்டும்'' என்ற கோட்பாட்டினுக்குள் ஐ.தே.கட்சியானது சரண் புகுந்த வேளையில், அதிலுள்ள தமிழர்களான வி.குமாரசாமி, சி.சுந்தரலிங்கம், எஸ்.நடேசன், ஜி.ஜி.பொன்னம்பலம் போன்றோர் தமிழர்கள் பிரிந்து சென்று தனி நாடமைக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டதாகத் தெரிவித்தனர். தமிழர்களுக்கு இழைக்கும் பாரபட்சமானது இத்தகைய நிலைப்பாட்டிற்கு அவர்களை இட்டுச் செல்லுமெனவும் எச்சரித்தனர். பின்னர் ''தமிழர் மகாசபை'' என்ற அமைப்பினூடாக தங்கள் அபிப்பிராயங்களை வெளிப்படுத்தினர். அதன் செயலாளராகவிருந்தவரும், பின்னாளில் வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டவருமான ஆ. தியாகராசா அவர்கள், ''இருபத்து நாலு இலட்சம் தமிழரின் வருங்காலம் தமிழ் ராஜ்யம் ஒன்றே வழி'' என்னும் நூலினை (1956) வெளியிட்டார். அதன் மூலமாகத் தமிழ் ஈழக் கோரிக்கையை அவர் சார்ந்த தமிழ் மகா சபையினர் வலியுறுத்தினரெனலாம். ஆயினும் சிங்களப் பேரினவாதிகளின் செயன்முறைமைகளினால் ஏமாற்றத்திற்கு உள்ளான, சி. சுந்தரலிங்கம் அவர்களே தனித் ''தமிழ் ஈழம் ''அமைப்பதற்கான குரலினை ஓங்கி ஒலித்தவரெனலாம். பிற்காலத்தில் ஈழத்தமிழர் ஒற்றுமை முன்னணியை அமைத்துச் செயற்பட்டவர் அவர். ''அடையாள அட்டை'' மசோதா மீதான கருத்து வேறுபாடுகளினால் இலங்கைத் தமிழரசுக் கட்சியிலிருந்து விலகிய முன்னாள் ஊர்காவற்றுறை பாராளுமன்ற உறுப்பினர் வி. நவரத்தினம் அவர்களும் 1969 ஆவணியில் ''தமிழர் சுயாட்சிக் கழகம்'' என்னும் கட்சியைத் தாபித்துத் தமிழ் ஈழமே அதன் நோக்கமெனத் தெரிவித்தார். இத்தகைய சந்தர்ப்பங்களிலெல்லாம் இவர்களது கருத்துகள் தமிழ் பேசும் மக்களைக் கவரவோ வெற்றிகொள்ளவோ தவறிவிட்டனவென்றே சொல்லவேண்டும். ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணியின் காலத்துக்குகந்த கோரிக்கையைத் தமிழ் மக்கள் ஏற்றே வாக்களித்தனர். அன்றிலிருந்து இன்றுவரையில் தனிநாடான ''தமிழ் ஈழம்'' பற்றிய கருத்துக்களே தமிழர் அரசியலில் முக்கிய பங்கெடுத்து வருகின்றனவெனில் அது தவறாகாது.

தொடர்ச்சியான அரசியல் அனுபவங்களும்,ஏமாற்றங்களும், அவநம்பிக்கைகளுமே தமிழ்த் தேசியவாதிகளின் சிந்தனையை மாற்றியமைக்கத் தூண்டின.மிதவாதிகள் ஒரு புறம் தமது அரசியல் நடவடிக்கைகளைத் தொடர்கையிலே, தீவிரவாத சிந்தனைப் போக்காளர்களும் தமது நடவடிக்கைகளை மறுபுறத்தில் விரிவாக்கினர். 1971 பெப்ரவரி மாதத்தில் இடம்பெற்ற பிரதி மந்திரி சோமவீர சந்திரசிறீயின் காருக்குக் குண்டு வைத்த நிகழ்ச்சியே தமிழ்ப்பகுதியில் முதல் முறையாக ஏற்பட்ட பலாத்காரச் சம்பவமாகுமெனக் கருதப்படுகிறது.1974 ஜூன் ஐந்தில் சிவகுமாரன் என்னும் தீவிரவாத இளைஞனின் மரணமுங் கூடப் புதியதோர் மாற்றத்தை நாடி நின்ற குழுவினரின் பிரதிபலிப்பென்றே கூறவேண்டும்.

யாழ்ப்பாணம் மேயராகவிருந்த அல்பிரட் துரையப்பாவின் கொலையும், அதனைத் தொடர்ந்து தமிழிளைஞர் பலர் கைதுசெய்யப்பட்டமையும் இத்தருணத்தில் தீவிரவாதத்தின் அழுத்தத்தைக் காட்டுவனவாகும். போராளிகள், தீவிரவாதிகள், பயங்கரவாதிகள், சுதந்திர தாகத்தினர் என்றெல்லாம் ஒவ்வொரு வகையினரால் வர்ணிக்கப்படுவோரது இயக்கங்களின் தோற்றுவாய்களும், செயன்முறைகளும் தமிழ் பேசும் மக்களது விடுதலையைக் கோரியே எழுந்தனவெனலாம்.

தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகளின் தாக்கமானது தமிழிளைஞர் உள்ளங்களில் ஏற்படுத்திய புயல் மடியுமுன்னரே, 1977இல் ஆட்சிப்பீடமேறிய அரசு எதிர்கொண்ட சிங்கள -தமிழ்க் கலவரமான்று, நாடு முழுவதிலும் தமிழ் மக்களிடையே பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியது.இதனைத்தொடர்ந்து 1979,1981களிலும் இடம்பெற்ற அரச படைகளின் அத்துமீறல்களும் தமிழ்பேசும் மக்களை நிலைகுலையச் செய்தனவெனலாம்.1983ஜூலை 23இல் திருநெல்வேலியில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டதும், மறுநாளே கொழும்பு உட்பட, இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் பரவலாகத் திட்டமிட்ட முறையில் நடைபெற்ற தமிழருக்கெதிரான ஒடுக்குமுறைகள் கொஞ்சமல்ல. ''படமுடியாதினித்துயரம்'' என்ற பாங்கில் தமிழர் தத்தளித்தனர். இத்தகைய தவிர்க்கவொண்ணா நிலைப்பாடுகளே தமிழ்த் தீவிரவாதக் குழுவினரை மேலும் வேகம் கொள்ள வைத்ததெனலாம்.

1987இல் வெளியிடப்பட்ட''WAR & PEACE IN SRI LANKA'' என்ற நூலில் றோகன் குணரத்ன பக். 27இல் அதுவரையிலுமான காலப்பகுதியில் தமிழ்ப் போராளிக் குழுக்கள் முப்பத்தாறினை இனங்கண்டு எடுத்துக்காட்டியுள்ளார். இந்த அமைப்புக்களில் பலவும் அற்பாயுளினை உடையனவாகும். மேலும் தனிக்குழுக்கள் பலவும், அவை சேர்ந்த கூட்டுக்கள் சிலவும் இதில் இடம்பெற்றுள்ளன. இக்கால கட்டத்தின் பின்னர் கூடப் புதிய குழுக்களினதும், கூட்டுக்களினதும் தோற்றங்கள் உருவானதைப் போலவே, பழையன வற்றில் பல கழிந்தும் சென்றுள்ளனவென்பதே உண்மையாகும். எனினும், இலங்கையின் அரசியல் வரலாற்றில் இப் போராளி அமைப்புக்களின் முக்கியத்துவமானது, அவ்வக்கால அரசியற் செயற்பாடுகளினாலும், தமிழ் பேசும் மக்களது ஆதரவினாலேயுமே தீர்மானிக்கப்படுகிறது என்பது உணரத்தக்கதாகும்.

1970 இன் ஆரம்ப கட்டத்தில் ஆயுதம் தாங்குதலில் நம்பிக்கை கொண்ட இளைஞர் குழுவினர் தோற்றம் பெற்றதும்,காலப்போக்கில் அக்குழுவானது இரண்டு பிரிவாகப் பிளவுபட்டதும், அவற்றினடித்தளத்திலிருந்தும், இல்லாமலும் ஏனைய பல குழுவினர் காலத்துக்குக் காலம் தோற்றம் பெற்றதும் கடந்த கால சம்பவங்களாகும். ஆயுதம் தாங்கிய குழுக்களின் தோற்றங்களின் பின்னர், வடகிழக்கு மாகாணங்களில் அரசாங்கத்தின் அடக்குமுறைகளும், ஒடுக்குமுறைகளும் மேலோங்குவதாயிற்று. 1978 மே மாதம் ''விடுதலைப்புலிகள்'' தடைச்சட்டத்தையும், 1979 ஜூலை 30இல் பயங்கரவாதத் தடைச்சட்டத்தையும் அரசு நிறைவேற்றியது.

தமிழ்ப் பிரதேசங்களில் வங்கிக்கொள்ளைகள் ,அரச வாகனக் கொள்ளைகள், பஸ் எரிப்புகள்,புகைவண்டி எரிப்புகள், அரச படையினர் மீதான தாக்குதல்கள், பொலிஸ் நிலையத் தாக்குதல்கள்,அரச விசுவாசிகள் கொலைகள்,காட்டிக்கொடுப்போர் கொலைகள் எனப் பல்வேறு வன்முறைகள் இடம்பெறலாயின. அரசாங்கமும் பயங்கரவாத முறியடிப்பு என்ற போர்வையில் எடுக்கும் நடவடிக்கை தமிழ்பேசும் மக்களது உயிருக்கும், உடைமைகளுக்கும் பலத்த சேதங்களை உண்டாக்கியது. இத்தகைய சூழ்நிலையில், 1983 ஜூலை கலவரத்தின் பின்னர், தொடர்ச்சியாகவே பல வன்முறைகள் நிகழலாயின. அவசரகாலச்சட்டம், ஊரடங்கும் சட்டம், முப்படைகளின் பலம், வெளிநாடுகளின் நிதி மற்றும் ஆயுத உதவிகள் முதலிய அனைத்தினூடாகவும் இலங்கை அரசாங்கமானது, வடகிழக்குப் பகுதிகளில் தீவிரவாதத்தை அடக்கிவிட முயற்சி செய்கின்றது.

இலங்கைத் தமிழ் பேசும் மக்களது நிலைபேற்றுக்குகந்த ஓர் அரசியல் அந்தஸ்தினை அடையவே இப் போராட்டமெனப் போராளிக் குழுக்கள் தெரிவித்தன. இலங்கை அரசாங்கத்துக்கும் போராளி இயக்கங்களுக்குமிடையில் திம்பு நகரில் 1985 ஜூலை-ஆகஸ்ட் மாதங்களில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் ஆரம்ப நிலையில், தமிழர்களின் அனைத்துத் தரப்பினரும் ஏகமனதாக முன் வைத்த கோரிக்கைகளின் அடிப்படை பின்வருமாறு அமைந்திருந்தது. (தொடரும்)

மனிப்பல்லவத்தில் மஹோற்சவம்

நயினை நாக பூசணி அம்மன் பாமாலை

தெப்பத் திருவிழா



உன்னை அன்றித் தெய்வம் வேறுண்டோ

உன்னை யன்றித் தெய்வம் வேறுண்டோ
மன்னும் நயினைப் பதி நாக பூசணித்தாயே (உன்னை)

உன்னும் அடியவர் உன் பதி அடைந்தே
பன்னுவர் பனுவல்கள் எண்ணுவர் நின்நாமம் (உன்னும்)

சந்ததமும் நீன் சந்நிதி அன்பரால் நிறைந்திருக்கும்
எந்தாயே நீன்அருள் ஏங்கியே வேண்டி நிற்க
முந்திய வினை தீர்க்க முன்னே வருபவளே
பந்திக் கும் பாசம் அறுத்து நற்கதிதர (உன்னும்)

முத்தி தரும் இன்ப முதற்பொருளே தேவி
சத்தியே சுயம்புவாய் நயினை அமர்ந்தவளே
எத்திக்குமே இருந்து சேர்ந்திடும் அடியவரின்
பத்தியை மெச்சியே நற் பதத்தினை வழங்கிடும் (உன்னை)

நா. வரதராசா

நாளை நிலைக்கும் நல்வாழ்வு

அரவந்தனை யாளும் அம்மாளே
அரனுடன் அதிலே அமர்ந்தாயே
இரையுங்கடலின் ஓரத்திலே -பக்தர்
இதயந்தனையே கவர்ந்தாயே
எத்தனை கொடிகள் பறந்தாலும் -தாயே
அத்தனை கொடியும் நினக்கு நிகராகுமோ
நயினை அம்மனின் உற்சவத்தால் -நாட்டில்
நாளை நிலைக்கும் நல்வாழ்வு

ஜனனி பஞ்சலிங்கம்,
பருத்தித்துறை

அகிலத்தை ஆளும் தாய் நீயே

கைலை மலை நாயகியாம் எங்கள் அன்னை
நயினையிலே கோவில் கொண்டாள் எங்கள் அன்னை
பஜனை ஓசை கேட்டவுடன் எங்கள் அன்னை
பாம்பாக வந்திடுவாள் எங்கள் முன்னே
காமாட்சி மீனாட்சி கரு மாரியாய்
காசி விசாலாட்சி ஸ்ரீ துர்க்கையாய்
ஆதி பராசக்தி அபி ராமியாய்
அகில மெல்லாம் ஆண்டு வரும் தாய் நீயன்றோ

கவிமணி அன்னைதாஸன்

பல்வகைச் செல்வமும் பெறுவோம்

நிலையிலா வாழ்வதைக் காட்டுதல் போலே
அலைகடல் மத்தியில் வலமாய் இவரும்
நாவாய் மத்தியில் பேரொளி மிளிர
நயினை அம்மை அமர்ந்து விளங்கும்
தெப்பத் திருவிழா கண்டு வணங்கிப்
பல்வகைச் செல்வமும் பெறுவோம்யாமே

கவிமணி கந்த முருகேசதாசனார்

அருளைப் பொழியம்மா

அலைகடலில் மிதந்து வரும் நயினையிலே
அருள் ஆட்சி புரிகின்ற நாகபூசணியே
அலைகடலில் அலையாக திரண்டு வரும் பக்தர்களை
தினம் தினம் காத்தருளும் நாகபூசணியே
புளியந்தீவில் இருந்து பூக் கொண்டு சென்று
நாகம் பூசித்த பூரணியே
இவ் இலங்கைத்தீவில் அமைதி நிலைபெற
அருளைப் பொழியம்மா ஸ்ரீநாகபூசணியே

தெ.வேழவேந்தன்

அலை முத்தெறியும் நயினை வளர் அழுது

ஈழத்தில் ஏழு தீவுகள் சூழ்ந்திருக்க எழில்பெற்று விளங்குவது நயினையம்பதி. உலகத்தில் சக்தி ஆலயங்களுள் சுயம்பு திருவுருவத்தை கற்பக்கிரகத்தில் கொண்டிலங்கும் ஒரேயொரு சக்தி ஆலயம் இது. மணிதீவு, மணிபுரி, சமபல்தீவு, மணி நாகதீவு, மணிபல்லவம், நாக நயினாதீவு, நாகதீவு, நாகேஸ்வரம், பிராமணத்தீவு, தணணித் தீவு, நாகநயினாதீவு, நாகதீப ஆகிய பல நாமங்கள் பெறும் ஷேத்திரத்தின கண் அமைந்துள்ள, 64 சகதிபீடங்களில் ஒன்றாகிய புவனேஸ்வரி பீடம். அமைந்த தலம் நயினையம்பதி.



நாகபாம்புக் கொடிகளினால் சூழப்பெற்ற சுற்றுமதில் சிறப்பும், குளிர் நிழல் பரப்பும் வேம்பங்கூடங்களும், சுந்தரக் கோபுரமும், மூலஸ்தானத்து அழகும், அன்னையின் அபய விரதச் சிறப்பும், அளவற்ற தண்ணருள் பரப்பும் நெடும் கடைக் கண் பார்வையும் உபய பாதத்தின் பாடகம் உற்ற தண்டை கொலுசின் அழகும், பத்துவிரல் மோதிரமும் பருத்த ஒட்டியாணத்தின் பளபளப்பும், முத்து மூக்குத்தியின் அழகும், மோகன மாலையினழகும், கங்கணம், கம்மல், காப்பு, காதணி, வளையலணிந்த காட்சி யழகும், பொங்கு மாங்கல்யத்தின் திருவழகும் பட்டாடை அழகும், இந்த அம்சங்களையெல்லாம் தாங்கிய தாயின அழகும், பேரருள் பிரவாகமும், அவள் திருவாக்கும் அனைத்து பக்தர்களையும் பிரமிக்கச்செய்து விடுகின்றன.

நயினை நகர் உறைசெல்வி, நயினை மாநகர்மேவி வைகி அருளசெய்யும் தாய் ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும குண்டலினி சக்தியாக நீலத்திரைகடல் ஓரத்தில் ஆழ்கடல் மத்தியில் அமர்ந்திருந்து அருள்பாலித்து வருகிறாள். சம்பந்தர் தேவாரத்தில் "நாகேஸ்வரத தாயே" என்று குறிப்பிடப்படும் பாடல்களின் பதிகம் அருளப்பட்ட திருத்தலம் இதுவேயாகும். அருணகிரிநாதர் திருப்புகழில் "கரிநாக பூஷணத்தி" "நாகபூசணி" என்னும் நாமங்கள்மூலமும் அபிராமிப்பட்டரும் அபிராமி அந்தாதிப் பாடல் ஒன்றில் "சாதி நச்சுவாய் அகிமாலினி" என்றும்நயினை அம்மனை பாடல் மூலம் பூசித்துள்ளார்கள்.

சர்ப்ப வழிபாட்டின் தொன்மைக் கருவூலமாக இருப்பது, தூயமையான நாகவழிபாட்டினை நல்குவது நயினாதீவாகும். கருவறைக்குள் காணப்படும் பஞ்சமுக கருநாகச் சிலையும் அதனருகில் உள்ள அழகிய பீடத்தின் கண் அருவுருமாக வுள்ள அம்மனின் திருவுருவம் பல்லாயிரம் ஆண்டுகளைக் கடந்த தோற்றம் காணமுடியாத சுயம்பு உருவங்களாகக் காட்சியளிக்கின்றன. அருளாளர்களின் அருட் பேராயிரத்தில், நாகேஸ்வரி, நாகராஜேஸ்வரி, நாகராஜ ராஜேஸ்வரி, புவனேஸ்வரி, ஏகசிவநாகேஸ்வரி என்றெல்லாம் அர்ச்சிக்கப் படுபவள்.

அம்பிகை மனோன்மணி அம்மைக்குரிய அங்கலட்சணத்துடன் கூடிய நான்கு திருக்கரங்களுடன் முன்னுள்ள வலக் கரமும், இடக்கரமும் அபய கரங்களாகவும் பின் வலக்கரம் தாமரை மலரைத் தாங்கியுள்ளதாகவும் பின் இடக்கரத்தில் அட்சரமாலை திகழ்வதாகவும் தெற்குக் கோபுர வாசலின் கண் தெற்கு நோக்கிய நிலையில் அருள் கடாட்சத்தினை அள்ளி வீசிக்கொண்டிருக்கின்றாள்.

வைதிக மரபு முறையிலும் ஆகம மரபு முறையிலும் ஸ்ரீ வித்தியோபாசனை ஆகிய மூன்று முறைகளின் மூலம் அன்னையை வழிபடுகின்றார்கள். மாதம் தோறும் வரும் பூரணையில் அன்னை ஸ்ரீ சக்கரத்தில் மேருப்ரஸ்தார ஸ்ரீசக்கர இயந்திரத்தில் வித்தியோபாசனமூலம் உபாசனை செய்யப் படுகிறாள். பிள்ளை இல்லாதவர்கள் நாகபூசணி அம்பாள் ஆலயத்திற்கு வருகை தந்து நாக பிரதிஷ்டை செய்து பிள்ளைச் செல்வத்தினை பெற்று மகிழ்கின்றார்கள். தீராத நோய் கொண்டவர்கள் தம் நோய் தீர்த்து உடல் உள மகிழ்ச்சி பெறும் மிக உயர்ந்த அருள்சக்திதலம் இதுவாகும். திருமணமாகாத கன்னியர்களுக்கு திருமணப் பெருவாழ்வில் மாங்கல்யப் பிச்சைதரும் மங்கள நாயகியாக விளங்குபவள் அன்னை நாகபூசணி.

மணித்தீவில் புவனேஸ்வரி பீடம் என காளிதாசனாலும் மணிமேகலை நூலில் மணிபல்லவம் என்று சீத்தலைச் சாத்தனாராலும் மணித்தீவு என்று பட்டினத்தடிகளாலும் சௌந்தர லகரியில் ஆதி சங்கரர் சப்த கடல்களின் மணித்துவீப நிவாசினி என்று போற்றும் பெருமை பெற்றவள் என்றும் அழைத்திருப்பதன் மூலம் அன்னையின் அருள் வெளிப்பாட்டினை பேரருளாளர்களின் மூலம் காணலாம். தேவி பராக்கிரமத்தில் மணித்தீவின் ஸ்ரீகாமயோகினி பீடம், திருபுர பைரவி பீடம் என இரண்டு பீடங்கள் அமைந்த கோட்டம் இதுவேயாகும். நயினை ஷேத்திரத்தின் மூர்த்தத்தின் மகிமையினை அறிந்து கொள்வதற்காக அம்மையின் அருளைவேண்டி பக்தர்கள் ஈழத்தின் எல்லாப் பாகங்களிலிருந்தும் புலம் பெயர்ந்த நாடு கள் உட்பட உலகின் எப்பாகங்களிலிருந்தும் நாள்தோறும் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் வந்தவண்ணமே இருக்கின்றார்கள்.

பண்டைய நாக வழிபாட்டின் எச்சமாக மட்டுமின்றி சிவ நாக ஈஸ்வரி வழிபாட்டின் சங்கமத்தின் சின்னமாக் விளங்கும் இத்தலத்தின் நேர்த்திப்பொருள்களில் மிகவும் சிறப்பு,

நயினை நவரத்தினம் பரந்தாமன்

வாய்ந்தவை தொட்டிலும், பிள்ளையும் பாம்புமாகும். இங்குள்ள கருடன் கல்லும் பாம்புசுற்றிய கல்லும் மூலமூர்த்தியும் ஆதி சேடனும் காலம் காணமுடியாத வனனி விருட்சமும் அமிர்த புஸ்கரனி திருப்புண்ணிய தீர்த்தமும் அகிலத்தின் பாவங்களையும் நீக்கி அனைத்து ஷேமங்களையும் உயிர் வர்க்கத்துக்கு தருவதால் இத்தலம் மூர்த்தி தீர்த்தம் உலகத்தின்அதி உயர் உன்னத அருட்கொடையாக பக்தர்களுக்கு கிடைத்துள்ளது.

பெற்ற தாலன்னை பெறுமுயிரனைத்தும் பேணலா
லன்னை பெற்றிடுவோர்
உற்றதாலன்னை விரும்பிய அனைத்தும் உதவலா
அன்னை எக்கலையும்
சொற்றதாலன்னை உலகொடுவானும் தொழுதலால்
அன்னை என்றென்றும்
பற்றதாம் கருணை பொலிதலால் அன்னை பராபரை நாக
பூசணியால்.

சாத்வீகப் போர் ஆயுதப்போராட்டமாக மாறியமைக்கு சிங்கள–பௌத்த பேரினவாதமே அழப்படைக் காரணம்

யாழ்.பல்கலைகழக கைலாசபதி கலையரங்கில் நேற்றுக்காலை இடம்பெற்ற "தமிழ்த்தேசியத்தின குரல்" நிகழவில் அருட்தந்தை வண.ஜி. பேணாட் அடிகளார் ஆற்றிய சிறப்புரை.

தொடர்ச்சி (2)

1966ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இவ் ஒப்பந்தத்தின்படி "தமிழ்மொழி விசேட சட்டமூலம்" பாராளுமன்றத்தில் முன் வைக்கப்பட்டபோது கிளம்பிய எதிர்ப்பின் காரணமாக "டட்லி-செல்வா" ஒப்பந்தம் மீண்டும் ஒரு தலைப்பட்சமாக கிழித்தெறியப் பட்டது.

1972ஆம் ஆண்டு புதிய யாப்பு

1970ஆம் ஆண்டுத் தேர்தலில் வெற்றியீட்டிய கூட்டு முன்னணி 1972ஆம் ஆண்டு அரசியல் யாப்பை புதிதாக அமைக்கும் திட்டத்தில் ஈடுபட்டபோது சமஷ்டிக் கட்சி யாப்பமைப்புச் சபையிடம் வைத்த ஆலோசனைகளுள் பின்வருவனவும் அடங்கும்.

- "டட்லி-செல்வா ஒப்பந்தத்தை அரசியல் யாப்புக்குள் உள்வாங்குதல்;
- தமிழ்மொழியை தமிழ் மாணவர்களின் கல்விமொழியாக அமைத்தல்

இவ் ஆலோசனைகளும் நிராகரிக்கப்பட்டன. சமஷ்டிக் கட்சி தவிர்ந்த வேறு முக்கிய தமிழ்க்கட்சிகள் ஒன்றுசேர்ந்து சில ஆலோசனைகளை யாப்பமைப்புச் சபைக்கு சமர்ப்பித்தனர்.

- தமிழ்மொழிக்கு சம அந்தஸ்து வழங்குவது;
- பிரஜா உரிமை பறிக்கப்பட்டவர்களுக்கு அதை மீண்டும் வழங்குவது;
- அரசியல் யாப்பு எந்தவொரு இனத்திற்கோ, மதத்திற்கோ பாரபட்சம் காட்டாது சமத்துவத்தை பேண வேண்டும் போன்ற அம்சங்களும் அங்கு அமைந்திருந்தன.

இவையும் நிராகரிக்கப்பட்டன. அது மட்டுமன்று, நடைமுறையிலிருந்துவந்த யாப்பின் 29ஆம் அலகு புதிய யாப்பில் இடம்பெறவில்லை..மத, இன, மொழி போன்ற எந்த அடிபடையிலும், சமத்துவத்தைப் பேணி, சிறுபான்மையினரின் உரிமைகளை உறுதிப்படுத்தியது. அந்த அலகு தான் களையப்பட்டு, பௌத்த சாசனத்திற்கு புதிய யாப்பிலே விசேட முன்னுரிமை வழங்கப்பட்டது.

1978ஆம் ஆண்டு மற்றுமோர் யாப்பு

1978ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட அரசியல் யாப்பும் தமிழ் மக்களின் குறைபாடுகளைக் கணக்கிலெடுக்கவில்லை. சிங்கள-பௌத்த தேசியத்தின் மேலாதிக்கத்தை உறுதிப்படுத்தும் ஆவணமாகவே அது அமைந்தது.

தென்னிலங்கை அரசியல் சமூகத்திடமிருந்து கௌரவமான வாழ்வை எதிர்பார்க்க முடியவில்லை.

கல்வித்துறையில் பாகுபாடு

பேரினவாதத்தின் இன்னுமோர் வெளிப்பாடாக, 1970 இல் கல்விததுறையில் நடைமுறைப்படுத்தப்பட்ட "தரப்படுத்தல்," தமிழ் மாணவ மாணவிகளின் உயர்கல்விக்கு பாரிய தடையை ஏற்படுத்தியது. ஏற்கனவே "சிங்களம் மாத்திரம்" என்ற சட்டமும் தமிழ் மக்களுக்கெதிரான இனத்துவேஷமும் தமிழ் மக்களின் வேலைவாய்ப்பு, பதவி உயர்வு என்பனவற்றைப் பாதித்துவந்தன.

"சமஷ்டி" கொள்கையைக் கைவிட்டு "தனிநாடு" என்ற கொள்கை

இவற்றையெல்லாம் தமது இன அடையாளத்தையே அழித்துவிடக்கூடிய செயற்பாடுகளாகக் கண்டபோதே தமிழ் மக்கள் மத்தியில் "தமிழ்தேசிய" உணர்வு வலுப்பெற்றது.

1976இல் வட்டுக்கோட்டை மாநாட்டில் தனிநாடாகப் பிரிந்து செல்வதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது. அடுத்த ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் தனிநாடு என்ற கோட்பாட்டில் போட்டியிட்ட வேட்பாளர்களுக்குக் கிடைத்த வெற்றி தமிழ் மக்களின் அரசியல் நிலைப்பாட்டைத் தெட்டத்தெளிவாகக் காட்டியது.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டமானது "தனிநாடு" என்ற கோரிக்கையுடன் ஆரம்பிக்கவில்லை. பிளவுபடாத நாட்டுக்குள் அதிகாரத்தைப் பகிர்ந்து, தமிழ்மொழி, கலாசாரம், ஆகியவற்றைப் பேணுவதற்கும், சமூக பொருளாதார வாழ்வில் சமமான உரிமைகளைப் பெற்று அனுபவிப்பதற்குமான அரசியல்அமைப்பு உருவாக்கப்பட வேண்டுமென்பதே அவர்களுடைய ஆரம்ப இலக்காயிருந்தது.

அதுமட்டுமனறு நாடு பிளவுபடுவதை அவர்கள் அப்போது எதிர்த்தார்கள். 1970ஆம் ஆண்டுத் தேர்தலிலே "தனிநாடு" என்ற கோட்பாட்டின் அப்படையில் இரு தமிழ் வேட்பாளர்கள போட்டியிட்டார்கள். இரு தமிழ்த் தொகுதிகளில் போட்டியிட்டார்கள்.

அவர்கள் தோல்வியையே தழுவிக் கொண்டார்கள். ஏனென்றால் நாட்டைப் பிளவுபடுத்துவோரை ஆதரிக்க வேண்டாம் என்று சமஷ்டிக்கட்சியினர் பிரசாரம் செய்தனர். அவர்கள் பிரிவினையை எதிர்த்தார்களென்பதை தெட்டத்தெளிவாய்க் காட்டினார்கள்.

ஆனால் இவர்களும் படிப்படியாக "தனிநாடு" என்ற நிலைபாட்டிற்குத் தள்ளப்பட்டனர்.

தேசிய அடையாளத்தைப் பொறுத்தவரையில் இன ரீதியிலே நாம் தமிழர், சிங்களவர் என வேறுபட்ட சமூக-கலாசார வரலாற்றைக் கொண்டிருந்தாலும், தேச ரீதியிலே "இலங்கையர்" என்ற பெயரைப் பேணுவோம்; வேறுபாடுகளின்படி ஒவ்வொரு பகுதியும் தன் சிறப்புத் தனித்துவத்தை பேணும் அதேவேளை, "தேசமட்டத்திலே இலங்கையர் என்ற பாகுபாடற்ற பொது அடையாளத்தையே விரும்புகின்றோம்" என்ற கருத்தையே கொண்டிருந்தனர்.

ஆனால் அந்தக் காலகட்டத்தில், அதைப் புறக்கணித்த பெருமபான்மையின அரசியற் சமூகமானது "இலங்கையர்= சிங்கள, பௌத்த மக்கள்" என்ற சமன்பாட்டையே முன்வைத்தது.

இலக்கை அடைவதற்கு கையாளப்பட்ட வழி?

உரிமைகளைப் பெற்றுக்கொள்வதென்னும் இலக்கை அடைவதற்கு அவர்கள் முதலில் கையாண்ட கருவி வன்முறையல்ல, சாத்வீகமாகும். ஆனால்... 1956ஆம் ஆண்டு "தனிச் சிங்களம்" என்ற சட்டத்தை எதிர்த்து, தமிழ் மக்கள் அமைதியாக சத்தியாக்கிரகம் இருந்தனர். அவர்களுக்கெதிராக வன்முறை கடடவிழ்க்கப்பட்டது. இதில் 150பேர் சிங்களக் கும்பல்களினால் கொல்லப்பட்டனர்.

1958இல் 'பண்டா-செல்வா' ஒப்பந்தம் கைவிடப்பட்டதை எதிர்த்து மீண்டும் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டனர். அதற்கு கிடைத்த பரிசும் வன்முறைதான். சனக் கும்பல்களால் நூற்றுக்கணக்கான தமிழ்மக்கள் கொல்லப்பட்டதுடன் வீடுகளும உடமைகளும் தீக்கிரையாக்கப்பட்டன.

1961ஆம் ஆண்டு "தனிச்சிங்களம்" என்ற சட்டத்திற்கு எதிராக சத்தியாக்கிரகம் நடாத்தப்பட்ட போது யாழ்ப்பாணத்திற்கு முதன்முறையாக அனுப்பப்பட்ட இராணுவம துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் (குறைந்தது) ஒரு பொதுமகன் கொல்லப் பட்டார் பலர் காயப்பட்டனர். அத்துடன் தமிழ் பாராளுமன்ற அங்கத்தினர் பலர் உட்பட தமிழ்த்தலைவர்கள் கைது செய்யப் பட்டனர். மீண்டும் அஹிம்சைக்குக் கிடைத்த பதில் வன்முறையே.

1974ஆம் ஆண்டு யாழ்ப்பாணததில் அமைதியாக நடநது கொண்டிருந்த உலக தமிழாராய்ச்சி மாநாட்டின்போது பொலிஸார் மேற்கொண்ட வன்முறையில் 9தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். 1977ஆம் ஆண்டுத் தேர்தலையடுத்து (ஒரு மாதத்தின் பின்) பெரும் இனக் கலவரம் ஏற்பட்டது. முதல் இரு வாரங்களிலேயே நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் சிங்களக் கும்பல்களால் கொல்லப்பட்டனர்.

1977ஆம் ஆண்டுக் கலவரத்திற்குப் பின்னரும் அத்தகைய மோசமான கலவரங்கள் இடம்பெற்றன. 1981,1983ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட கலவரங்கள் குறிப்பிடத்தக்கவை. அரசைச் சார்ந்தவர்களின் ஈடுபாடும் இவற்றில் இருந்தன. 1984ஆம் ஆண்டு சர்வதேச நீதியரசர்களின் ஆணைக்குழு சார்பாக இலங்கை நிலவரத்தைப் பற்றித் தாம் தயாரித்த அறிக்கையில் போல் சிகாட் என்பவர் இலங்கையின் இனக் கலவரங்கள் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"இந்த இனக்கலவரங்களுக்கிடையேயான கால இடவேளை படிப்படியாக குறுகிக்கொண்டு வந்துள்ளது. நாட்டில் மேலும்மேலும் பரவலாக அவை இடம்பெறுகின்றன. அவற்றின் கனாகனமும் அதிகரித்துக்கொண்டே வந்துள்ளது. தமிழர் கொல்லப்படுவது, அங்கவீனராக்கப்படுவது, கொள்ளையடிக்கப்படுவது, வீடில்லாமல் ஆக்கப்படுவது போன்ற இனக்கலவரங்கள் எல்லாம் தொடர்பற்ற தனித்தனிச் சம்பவங்கள் அல்ல அவை ஒரு நாசகரமான வாடிக்கையாக மாறத் தொடங்கியுள்ளன... இந்த இனக்கலவர சம்பவங்களில் தெளிவாகக் காணப்படும் குணாதிசயங்களில் ஒன்று என்னவென்றால் தமிழ் மக்கள் தங்கள் மத்தியிலிருந்து சிங்கள மக்கள் மீது பழிவாங்கவில்லை என்பதாகும். இதனால் ஒவ்வொரு கலவரத்திலும் பலியானவர்கள் எல்லாம் தமிழ் மக்களே"

இவ்வாறு படிப்படியாக உரிமைகள் மறுக்கப்பட தமிழ் மக்களின் இலக்கு "சமவுரிமை" என்ற நிலைப்பாட்டிலிருந்து "தனித் தமிழீழம்" என்ற நிலைப்பாட்டிற்கு மாறியது. (தொடரும்)

ஜூலை 15-17 இல் இந்து மாநாடு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இந்துமா மன்றப் பொன் விழாவையொட்டி அகில இலங்கை இந்துமாமன்றமும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியும் இணைந்து நடாத்தும் இந்து மாநாடு எதிர்வரும் ஜூலை மாதம் 15ஆம் திகதிமுதல் மூன்று நாடகளுக்கு கோப்பாயிலுள்ள யாழ்.தேசிய கல்வியியற் கல லூரி வளாகத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.தேசியக்கல்வியியற் கல்லூரியில் இம் மாநாடு தொடர்பாக பத்திரிகையாளர்களுடனான சந்திப்பொன்று நடைபெற்றது.

இப் பத்திரிகையாளர் சந்திப்பில் அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் வி.கயிலாசபிள்ளை, செயலாளர் கந்தையா நீலகண்டன், யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி தி.கமலநாதன், பேராசிரியர் திருமதி சண்முகதாஸ், பேராசிரியர் நாசசியார் திருமொழி, யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் உபபீடாதிபதி பா.தனபாலன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற-19)

ஜின்னா கொலைச்சதி முயற்சியில் அத்வானியின் பங்கு

பிரிட்டிஷ் எழுத்தாளர்கள் வெளியிடும் திடுக்கிடும் தகவல்

பாகிஸ்தானின் நிறுவனத்தலைவர் முகமதுஅலி ஜின்னாவை படுகொலை செய்ய முயன்ற சதிகாரர்களில் பா.ஜ.க. தலைவர் அத்வானி முக்கியமானவர் என்று குற்றம் சாட்டப்பட்டார். இவர் மீதும் மற்றும் 17பேர் மீதும் 1947 செப்டம்பர் மாதம்10 ஆம் திகதி அன்று கராச்சியில் உள்ள ஜாம்செட் குவார்ட்டர்ஸ் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. இந்த உண்மை நீண்டகாலமாக வெளிச்சத்திற்கு வராமல் இருந்தது.



2002 ஆம் ஆண்டு இந்திய பிரதமர் வாஜ்பாய் உடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக பாகிஸ்தான் அதிபர் முஷாரப் இந்தியா வந்திருந்த போது உள்துறை அமைச்சர் அத்வானி அவரைச் சந்தித்துப் பேசினார். அப்போது இந்தியாவினால் தேடப்பட்டுவரும் குற்றவாளிகள் சிலர் பாகிஸ்தானில் மறைந்திருப்பதாகவும் அவர்களை இந்தியாவிடம் ஒப்படைக்குமாறும் கூறிய அத்வானி, அந்த குற்றவாளிகளின் பெயர்கள் அடங்கிய பட்டியலை முஷாரப்பிடம் கொடுத்தார்.

இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் ஜின்னா படுகொலையில் அத்வானிக்கு உள்ள தொடர்பு குறித்த செய்தி பாகிஸ்தான் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டது. இதையொட்டி பெரும் பரபரப்பு உருவாயிற்று. இதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பாக ஜின்னா படுகொலை சதி பற்றிய முழுவிவரங்களை 1975ஆம் ஆண்டு வெளியான 'நள்ளிரவில் சுதந்திரம்' என்ற ஆங்கில நூல் வெளியிட்டது.

டோமினிக் லேப்பியர், லேரி காலின்ஸ் ஆகிய இருவர் இந்தியா சுதந்திரம் பெற்ற வரலாற்றினை மிகுந்த ஆய்வுடனும் அசைக்க முடியாத ஆதாரங்களுடனும் எழுதி உள்ளனர். இந்நிகழ்ச்சி குறித்து அவர்கள் எழுதி உள்ளதின் முக்கிய விவரங்கள் வருமாறு:

1947அம் ஆண்டு ஆகஸ்ட் 14 ஆம் திகதி அன்று பாகிஸ்தான் உருவாக்கப்படும் என்றும், ஆகஸ்ட் 15ஆம் திகதி அன்று சுதந்திர இந்தியா பிறக்கும் என்றும் ஏற்கனவே முடிவு செய்யப்பட்டு இருந்தது. ஆகஸ்ட் 5ஆம் திகதி அன்று புதிய பாகிஸ்தான் உருவாக்கம் சம்பந்தமாக இந்தியாவின் வைசிராய் ஆக இருந்த மவுண்ட்பேட்டன் பிரபுடன் முஸ்லீம் லீக் தலைவர்களான ஜின்னா, லியாகத் அலிகான் ஆகியோர் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

அப்போது பஞ்சாப் சிஐடி பிரிவைச் சேர்ந்த அதிகாரியான சேவேஜ் என்பவரை மவுண்ட் பேட்டன் மற்ற இருவருக்கும் அறிமுகம் செய்து வைத்தார். ''இவர் கூறவிருக்கும் செய்தி மிக முக்கியமானது நீங்கள் இருவரும் அதைத் தெரிந்து கொள்வது நல்லது'' என்று மவுண்ட் பேட்டன் கூறினார். வந்திருந்த அதிகாரி பதட்டத்துடன் இருந்தார். அவர் கூறவிருந்த செய்தி மிகமிக இரகசியமானது என்பதால் தொலைபேசி மூலமோ, அல்லது வேறு யார் மூலமாகவோ அதைத் தெரிவிக்கவிரும்பாமல் லாகூரிலிருந்து அவர் விரைந்தோடி வந்திருந்தார்.

அவர் கூறிய செய்தி இது தான், ''சீக்கிய தீவிரவாதிகளின் ஒரு குழு இந்து வெறியர் அமைப்பான ஆர்.எஸ்.எஸ் உடன் இணைந்து கூட்டுச் சதித் திட்டம் ஒன்றினை வகுத்துள்ளது. பாகிஸ்தானை உருவாக்குவதற்காக முக்கிய அதிகாரிகளையும் ஆவணங்களையும் ஏற்றிக்கொண்டு டில்லியிலிருந்து கராச்சிக்குச் செல்லவிருந்த ரயில் வண்டிகளைத் தாக்கி தகர்க்கும் பொறுப்பை சீக்கிய தீவிரவாதக் குழுவினர் ஏற்றிருந்தனர்.

ஜின்னாவைப் படுகொலை செய்யும் பொறுப்பை ஆர்.எஸ்.எஸ். தொண்டர்கள் ஏற்றிருந்தனர். ஆகஸ்ட் 14ஆம் திகதி பாகிஸ்தான் அரசியல் யாப்பு அவையில் புதிய கவர்னர் ஜெனரலாக ஜின்னா பதவி ஏற்றுக்கொண்ட பிறகு தனது அதிகாரப்பூர்வமான இல்லத்திற்கு கராச்சி நகர வீதிகளின் வழியாக திறந்த காரில் வெற்றி ஊர்வலம் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அப்போது வழிநெடுகிலும் இருபக்கமும் திரண்டிருக்கும் கூட்டத்திற்குள் ஆங்காங்கே ஆர்.எஸ்.எஸ். கொலைகாரர்கள் தயாராக இருப்பார்கள். ஒவ்வொருவர் கையிலும் எறிகுண்டுகள் மறைந்திருக்கும். திறந்த காரில் பவனி வரும் ஜின்னாவை நோக்கி முதலாவது கொலைகாரன் குண்டை வீசுவான். அதிலிருந்து அவர் தப்பினாலும் அடுத்தடுத்த வர்கள் குண்டுகளை வீசுவார்கள். இந்த கொலைகாரர்களிடம் இருந்து ஜின்னா உயிரோடு தப்பவே முடியாது. இதுதான் ஆர்.எஸ்.எஸ். வகுத்திருந்த கொலைத் திட்டமாகும்".

பாகிஸ்தான் பிறந்த நாளிலேயே அதனுடைய நிறுவனத் தலைவரைப் படுகொலை செய்வதன் மூலம் அந்நாட்டில் மிக பயங்கரமான மதக் கலவரங்கள் மூளும். அதன் எதிரொலியாக இந்தியாவிலும் கலவரங்கள் நிகழ்ந்து பெரும் குழப்பம் ஏற்படும். இந்த குழப்பத்திற்கு ஊடே பாகிஸ்தானை அழித்துவிடலாம் என ஆர்.எஸ்.எஸ் திட்டமிட்டது.

இந்த சதித்திட்டத்தை அறிந்த ஜின்னாவும், லியாகத் அலிகானும் அதிர்ச்சி அடைந்தனர். இதைத் தடுப்பதற்கான வழிவகைகள் குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு மவுண்ட் பேட்டனை வேண்டிக்கொண்டனர். திறந்த காரில் ஊர்வலமாகச் செல்லாமல் மூடிய காரில் செல்ல வேண்டுமென அவர் கூறிய ஆலோசனையை ஜின்னா ஏற்க மறுத்து விட்டார். எது நேர்ந்தாலும் சரி திறந்த காரில் மக்களின் ஆரவாரத்தை ஏற்றபடி செல்லவே தான் விரும்புவதாகஅவர்பிடிவாதமாகக் கூறி விட்டார். அப்படியானால்அவரைப் பாதுகாப்பதற்காக அதே காரில் தானும் உடன் செல்ல மவுண்ட் பேட்டன் முடிவு செய்தார். ஒரு வேளை அது கொலைகாரர்களைப் பின்னடையச் செய்யும் என அவர் நம்பினார்.

இந்தத் திட்டத்திற்கும் ஒரு இடையூறு ஏற்பட்டது. இந்தச் செய்தியை எப்படியோ அறிந்து கொண்ட திருமதி மவுண்ட்பேட்டன் தானும் உடன்வந்தே தீருவேன் எனப் பிடிவாதம் பிடித்தார். அவரை எவ்வளவோ தடுத்துப் பார்த்த மவுண்ட்பேட்டன் வேறு வழியில்லாமல் அவர் விருப்பத்திற்கு இணங்க வேண்டியதாயிற்று.

ஆகஸ்ட் 14ஆம் திகதியன்று அரசியல் யாப்பு மண்டபத்தில் பாகிஸ்தான் கவர்னர் – ஜெனரலாக ஜின்னா பதவி ஏற்றார். அவரும் மவுண்ட்பேட்டனும் உரையாற்றிய பிறகு இருவரும் திறந்த காரில் ஒன்றாக புறப்பட்டனர். பின்னால் வந்த காரில் திருமதி மவுண்ட் பேட்டன் வந்தார். வழிநெடுக இலட்சக் கணக்கான மக்கள் திரண்டிருந்தனர். இருமருங்கிலும் இராணுவ வீரர்கள் வரிசையாக நின்று மக்களைக் கண்காணித்தனர். எந்த நிமிடத்தில் என்ன நடக்கும் என்பது புரியாமல் அதிகாரிகள் கையைப் பிசைந்து கொண்டு இருந்தனர்.

முப்பது நிமிடங்கள் நடைபெற்ற இந்தப் பயணம் பல மணி நேரம் நீடித்தது போன்ற உணர்வைத் தான் பெற்றதாகப் பிற்காலத்தில் மவுண்ட்பேட்டன் தெரிவித்தார். வழியில் எத்தகைய வேண்டாத நிகழ்ச்சியும் இல்லாமல் இருவரும் பத்திரமாக கவர்னர் – ஜெனரலின் இல்லத்தை அடைந்தனர். அடைந்ததும் ஜின்னா மவுண்ட்பேட்டனின் கையைப் பிடித்தபடி 'கடவுளுக்கு நன்றி! உங்களைப் பத்திரமாக அழைத்து வந்து விட்டேன்" என்றார்.

மவுண்ட் பேட்டன் புன்னகைத்தார். எத்தகைய துடுக்குப்பேச்சு என்று நினைத்துக் கொண்டஅவர். ''நீங்களா என்னை உயிரோடு அழைத்து வந்தீர்கள். நான்தான் உங்களை உயிரோடு அழைத்து வந்தேன்" என்று கூறிவிட்டுச் சிரித்தார்.

இந்த நிகழ்ச்சியை முழுமையாக விவரித்துள்ள இந்த நூலாசிரியர்கள் இறுதியில் பின்வருமாறு கூறி உள்ளார்கள் ''கராச்சியில் தீட்டப்பட்ட சதித் திட்டம் ஏன் நிறைவேற்றப்பட வில்லை என்பதை அறிய இந்த நூலின் ஆசிரியர்கள் தீவிர முயற்சிமேற்கொண்டனர். ஜலந்தரில் மிதிவண்டி பழுது பார்க்கும் பிரிதம் சிங் என்பவர் மட்டுமே ஒரு மறைமுகமான தகவலை அளித்தார்.

பாகிஸ்தான் ரயில்கள் தடம் புரண்டதையடுத்து, சீக்கியர்களின் சதித் திட்டம் தொடர்பாக, இவர் சி.ஐ.டி பிரிவினரால் கைது செய்யப்பட்டார். உண்மையில் ஆர்.எஸ்.எஸ் அதன் ஆட்களை கராச்சிக்குள் ஊடுருவச் செய்தது. இந்தக் குழுவின் தலைவர் முதல் கையெறி குண்டை வெடிக்கச் செய்த பின் மற்றவர்கள் தொடர்ச்சி யாக குண்டுகளை வீச வேண்டும் என்பது திட்டம். ஆனால் அந்த நபர் கார் கடந்து செல்லும் நேரத்தில் துணிச்சலை இழந்து விட்டார் என்று சிங் கூறுகிறார்."

எனவே மற்ற கொலைகாரர்களும் பின்வாங்கி விட்டனர். எனவே கொலை முயற்சி தோல்வியடைந்தது. 1942ஆம் ஆண்டில் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தில் சேர்ந்த அத்வானி தனது தீவிர இந்துத்வா தொண்டின் மூலம் 1947ஆம் ஆண்டில் கராச்சி நகர ஆர்.எஸ்.எஸ். செயலாளர் பதவிக்கு உயர்ந்தார். பாகிஸ்தானின் தலைநகரமாகப் போகும் கராச்சியில் ஆர்.எஸ்.எஸ். செயலாளராக அவர் தேர்ந் தெடுக்கப்பட்டதன் மூலம் இயக்கத் தலைமை அவர் மீது வைத்துள்ள நம்பிக்கை வெளிப்படுகிறது.

எனவே, ஜின்னா கொலைச்சதியில் இவருக்கு நிச்சயம் முக்கிய பங்கு இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. சதித் திட்டம் உளவுத் துறைக்குத் தெரிந்து விட்ட காரணத்தினால் இவர் உடனடியாக இந்தியாவிற்குத் தப்பயோடி வந்துவிட்டார்.

மீண்டும் அவர் கடந்த 57 ஆண்டு காலமாக பாகிஸ்தான் பக்கம் திரும்பாததற்கு இதுதான் காரணமாகும். பாகிஸ்தான் அதிபர் முஷாரப் அழைப்பை ஏற்றுச் செல்வதால் அபாயம் நேரிடாது என்ற நம்பிக்கை வந்தபிறகே பாகிஸ்தானுக்கு அவர் சென்றார். (ற)

வீதியின் இருமருங்கிலும் பற்றைகள்; விபத்துக்கள் அதிகரிக்க வாய்ப்பு

(கல்வியங்காடு)

இருபாலை -கோண்டாவில் வீதியின் இருமருங்குகளிலும் உள்ள பற்றைகளால் கூடுதலான விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாக கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

இருபாலை -கோண்டாவில் வீதியும் பொலிஸ் நிலைய இராச பாதை வீதியும் தற்பொழுது போக்குவரத்து நெருக்குதல் மிகுந்த இடமாக மாறியுள்ளது.

இவ் வீதிகளால் ஆசிரியர் பயிற்சி கலாசாலை மாணவர்கள், திருநெல்வேலி சந்தை வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் பயணம் செய்யும் வேளைகளில வீதிகளின் மருங்குகளில் வளர்ந்துள்ள பற்றைகள் பயணத்திற்கு அசௌகரியத்தை உண்டாக்குகிறது.

ஆகவே, பொதுமக்களின் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படாத வகையில் பற்றைகள் இல்லாது அழிக்கப்பட வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ற-74)

ஐக்கியத்திற்கும் அபிவிருத்திக்கும் பொதுக்கட்டமைப்பு அடித்தளமிடும்

-கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன

(கொழும்பு)

சுனாமி நிவாரண கட்டமைப்பை அமுல் படுத்தும் ஜனாதிபதியின் இத் தீர்மானத்தை புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்தின வரவேற்றுள்ளார்.

இது மிகவும் துணிச்சலான தீர்மானம் என அவர் மேலும் பாராட்டியுள்ளார்.

உத்தேச கட்டமைப்பு தேசிய ஐக்கியத்தை வளர்த்து அபிவிருத்தியை வேகப் படுத்துவதற்கு அடித்தளமிடும்.

மீண்டும் இனவாதம் தலைதூக்குவதற்கும் அரச அமைப்புக்களை தனியார் மயப் படுத்துவதற்கும் இடமளிக்கக்கூடாது என கலாநிதி விக்கிரமபாகு மேலும் கேட்டுக் கொண்டுள்ளார். (அ-9)

மகா கும்பாபிஷேகம்

((யாழ்ப்பாணம்)

கோண்டாவில் ஸ்ரீ பாரதிபுரம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் நூதன ஆலய உத்தம சத்த தச குண்ட பஞ்ச பிரதிஷ்ட மகா கும்பாபிஷேகம் ஜூலை மாதம் 13ஆம் திகதி புதன் கிழமை காலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

தொடர்ந்து 48 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறவுள்ளது. (அ)

மீன் சந்தையில் கட்டாக்காலி நாய்கள்

(இணுவில்)

இணுவில் தியேட்டர் வீதியில் அமைந்துள்ள மீன் சந்தையிலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் கட்டாக்காலி நாய்கள் அதிகமாகக் காணப்படுகின்றன.

இதனால் சந்தைக்கு வரும் பொதுமக்கள் பெரும் சிரமத்தை அனுபவித்து வருவதாகவும் அவை சிலருக்கு கடித்திருப்பதாகவும் வீதியில் விபத்து ஏற்படவும் இவை காரணமாக இருப்பதாகவும் இப்பகுதி வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (அ-122)

ஆலய ஒலிபெருக்கிகளின் சத்தத்தை மட்டுப்படுத்துக!

(கோப்பாய்)

தற்போது நடைபெற்று வரும் க.பொ.த உ/த பரீட்சை மண்டபங்களிற்கு அண்மைச் சூழலிலுள்ள ஆலயங்களில் உற்சவ காலங்களில் பகல்வேளை ஒலிக்கவிடப்படும் ஒலிபெருக்கியின் சத்தத்தை மட்டுப்படுத்துமாறு பொது அமைப்புகள தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி பரீட்சை மண்டபத்திலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்திலுள்ள ஆலயமொன்றில் ஒலிக்கவிடப்பட்ட ஒலிபெருக்கியின் சத்தம் அதிகமாக வந்த போது பரீட்சைக்கு இடையூறு ஏற்படுவதாக கல்லூரியின் தகுதி வாய்ந்த ஒருவரினால் கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற-79)

இரதோற்சவம்

((நல்லூர்)

திருநெல்வேலி அருள்மிகு தலங்காவல் பிள்ளையார் கோவில் இரதோற்சவம் எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 7மணிக்கும் தீர்த்தோற்சவம் மறுநாள் காலை 10மணிக்கும் நடைபெறும். (து-27)

புஷ்ஷுடன் சமாதானமாகப் போக சதாம் விருப்பம்!

காவலிலிருந்த அமெ. வீரர்கள் பரபரப்புத் தகவல்

(நியூயோர்க்)

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷுடன் பேசவும், அவருடன் சமாதானமாகப் போகவும் சதாம் உசேன் விருப்பம் தெரிவித் துள்ளார்.

ஈராக்கின் அசைக்க முடியாத அதிபராக இருந்த சதாம் உசேனின் அழிவு, 1991ஆம் ஆண்டு குவைத் மீது கை வைத்ததில் இருந்து தொடங்கிவிட்டது. 2003ஆம் ஆண்டு மார்ச்சில் அவருடைய ஆட்சிக்கு அமெரிக்க - பிரிட்டன் கூட்டுப்படைகள் முடிவு கட்டின. ஈராக்கில் தனது சொந்த ஊரான கிர்குக் அருகே சுரங்க அறையில பதுங்கி இருந்த அவர், 2003ஆம் ஆண்டு டிசம்பர் 14ஆம் திகதி சிக்கினார். தற்போது, ஈராக்கில் மிகவும் இரகசிய இடத்தில், அமெரிக்க இராணுவத்தால் சிறை வைக்கப்பட்டுள்ளார்.



தனது ஆட்சிக்காலத்தில் ஆயிரக்கணக்கான மக்களை கொன்று குவித்ததாக சதாம் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. குற்றச்சாட்டுகளை விசாரித்த தனி நீதிமன்றம் அமைக்கப் பட்டுள்ளது. விசாரணை நடந்து கொண்டிருக் கிறது. மர்ம இடத்தில் சிறை வைக்கப்பட் டுள்ள சதாம், விசாரணைக்கு அழைத்து வரப் படுவது கூட பரம இரகசியமாக செய்யப்படு கிறது.

அப்படி இருந்தும், சிறையில் ஜட்டியுடன் சதாம் துணி துவைப்பது போன்ற புகைப் படங்கள், பத்திரிகைகளில் சமீபத்தில் வெளி யாகின. இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

அடுத்த கட்டப் பரபரப்பு, அடுத்த மாதம் நடக்கவுள்ளது. சிறையில் ஓராண்டாக சதாமுக்கு காவல் புரிந்த ஐந்து அமெரிக்க வீரர்கள், அவரைப்பற்றி கதை கதையாக கூறி இருக்கின்றனர். "சிறையில் சதாம் எப்படி இருக்கிறார்? என்னென்ன செய்கிறார்? யாரைப் பற்றியெல்லாம் உயர்வாக நினைக்கிறார்? பெண்களைப் பற்றிய அவருடைய கண்ணோட்டம்? அமெரிக்க முனனாள், இந்நாள் அதிபர்கள் எப்படிபபட்டவர்கள்?' இப்படி பல்வேறு தகவல்கள் அடங்கிய செய்தியை அமெரிக்க பத்திரிகை ஒன்று வெளியிட உள்ளது.

சதாமுக்கு காவல் புரிந்த பென்சில்வேனியா தேசியப்படையைச் சேர்ந்த ஐந்து இராணுவ வீரர்களும் தற்போது அமெரிக்கா திரும்பிவிட்டனர். சதாம் அடைக்கப்பட்டு இருக்கும் இரகசிய இடம், அவரைப் பற்றிய முக்கிய இரகசியத் தகவல்களைத் தவிர, சதாம் தங்களிடம் பேசிய எல்லா விபரங்களையும் அவர்கள் கூறியுள்ளனர்.

சிறையில் அவர்களிடம் சதாம் கூறிய தகவலில் சில....



"கடந்த 1980-89ஆம் ஆண்டு ஈராக்கிறகும், ஈரானுக்கும் இடையே போர் நடந்தது. அப்போது, அமெரிக்க அதிபராக ரொனால்டு ரீகன் இருந்தார். போரின் போது அவர் உதவினார். போர் விமானங்கள் ஹெலிகொப்டர்களை எனக்கு விற்றார். ரீகனும், நானும் நல்ல நண்பர்கள். ரீகன் இப்போதும் உயிருடன் இருப்பதைப் போன்று உணர்கிறேன். அதிபா ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷும், அவருடைய தந்தையும முன்னாள அதிபருமான ஜோர்ஜ் புஷ்ஷும் நல்லவர்கள் அல்ல. முன்னாள் அதிபர் பில்கிளிண்டன் பரவாயில்லை.

அதிபர் புஷ்ஷுடன் பேசி சமாதானமாகச் செல்ல விரும்புகிறேன். என்னிடம் ரேழிவு ஆயுதங்கள் எதுவும் கிடையாது என்று புஷ்ஷுக்கு தெரியும். அவற்றை வைத்துக்கொள்ளமாட்டேன் என்பதும் அவருக்குத் தெரியும். ஒசாமா பின்லேடனுடன் ஒருபோதும் நான் பேசியது கிடையாது. எல்லா பிரச்சினை முடிந்ததும் என அரண்மனைக்கு வாருங்கள். ஈராக் எவ்வளவு அழகானது எனறு பாருங்கள்.

நல்ல பெண்ணாகப் பார்த்து திருமணம் செய்யுங்கள். மிகவும் அழகாகவும் இருக்கக் கூடாது. அசிங்கமாகவும் இருக்கக்கூடாது. மிகவும இளைய வயதாகவும் இருக்கக்கூடாது. மிகவும் வயதானவராகவும் இருக்கக்கூடாது. பெண்களிடம் வளைந்து போகக்கூடாது. அபபோது தான் பெண்களை நம் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும்.

என்னுடைய மகன் உதய்யின் திருமணத்துக்கு முன் மூன்று இரவுகள் அவருக்கு விபசாரிகளை ஏற்பாடு செய்தேன். முதல் நாள் இரவு வந்த பெண் மிகவும் அழகானவள். உதய்யை அவள் நன்றாக கவனித்தாள். அடுத்த நாள் இரவு வேறு பெண்ணை அனுப்பவா? என்று கேட்டேன். வேண்டாம் இது ஒன்றே போதும் எனறு உதய் கூறிவிட்டான்".

இவ்வாறு சதாம சொன்னதாக அமெரிகக வீரர்கள் கூறியுள்ளனர்.

சாப்பிடும் முன் கைகளை சதாம் நன்றாகக் கழுவுவார். யாருடனாவது கை குலுக்கினாலும் கைகளைக் கழுவுவார். சிறையில தரப்படும் சிப்ஸ்கள் மீது தண்ணீரை மெலிதாக தெளித்து சாப்பிடுவார். சாப்பிடும் முன், டேபிள் மற்றும் தட்டுகளை தானே சுத்தமாகக் கழுவுவார்.

ஜோக் சொல்வதிலும, கவிதை எழுதுவதிலும் அதிகம் ஆர்வம் காட்டுவார் சதாம் என்றும் அந்த வீரர்கள் கூறியுள்ளனர். (ற)

பாகிஸ்தான் லாகூரில் பிரபல நகைக் கடையில் காஸ் சீலிண்டர் வெடித்தது. இதில் 15க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

ஆப்கானில்

60 ஆண்டு கால பகை நீங்கியது

(நியூயோர்க்)

ஆப்கானிஸ்தானின் கிழக்குப் பகுதியில் இரு பழங்குடி இனத்தவர் இடையே 60ஆண்டுகளாக நிலவி வந்த பகை நீங்கியுள்ளது.

இப் பகை காரணமாக கடந்த ஆண்டு மட்டுமே 60 பேர் இறந்தனர்.

பக்தியா பகுதியில் உள்ள பக்தால் இன மக்களுக்கும், கோஸ்ட் பகுதியில் வசிக்கும் சபரி இனமக்களுக்கும்இடையே உள்ள பகையை நீக்க ஐ.நா. அதிகாரிகள் குழு முயற்சி மேற் கொண்டிருந்தது. இரண்டு மாதங்களாகப் பேச்சு வார்த்தை நடந்தது. கடந்த வாரம் உடன்பாடு ஏற்பட்டது.

இந்த இரு இனத்தவா வசிக்கும் பகுதி இடையே உள்ள சாலை கடந்த 8ஆண்டுகளாக மூடிக் கிடக்கிறது.

இரு இனத்தவர் இடையே பகை நீங்கியதை அடுத்து, இந்த சாலையைச் சீரமைக்க ஐ.நா. அமைப்பு தற்போது ஆர்வம் காட்டியுள்ளது. (ற)

குஜராத்தில் பரிதாப சம்பவம்

பஸ் பள்ளத்தினுள் பாய்ந்தது 19 பேர் ஸ்தலத்தில் பலி; 20 பேர் காயம்

(தர்மசாலா)

குஜராத் மாநிலத்தில் சுற்றுலா பஸ் ஒன்று பள்ளத்தினுள் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் 19 பேர் பலியாகியுள்ளதுடன் மேலும் 20 பேர் காயமடைந்துள்ளனர்.

இதுபற்றி பொலிஸ் தரப்பில் கூறப்படுவதாவது,

குஜராத் மாநிலம் வதோதராவிலிருந்து பஸ் ஒன்று பி.எஸ்.என்.எல். ஊழியர்களை ஏற்றிக் கொண்டு சுற்றுலா சென்றது. பஸ் மணாலி நோக்கி சென்றபொழுது திடீரென ஒரு வளைவு வந்தது. இதை சற்றும் கவனிக்காத பஸ் ஓட்டுனரால் பஸ்ஸை கட்டுப்படுத்த முடியவல்லை. பஸ் வீதியைத் தாண்டி பளளத்திற்குள் புகுந்தது. பஸ் பள்ளததிற்குள் வீழ்ந்த பொழுது ஓட்டுனரும், நடத்துனரும் குதித்து தப்பி ஓடிவிட்டனர்.

பள்ளத்திற்குள் பஸ் வீழ்ந்ததால் அதன் மேற்கூரை தனியாக உடைந்து பிரிந்து விட்டது. பஸ் தாறுமாறாக உடைந்து சிதறியது, இந்த விபத்தில் 19 பேர் பலியாயினர். மற்றும் 20 பேர் காயமடைந்தனர்.

இறந்தவர்களில் 12 பேர் உடல் அடையாளம் காணப்பட்டது. பலர் உடல் அடையாளம் காணப்படாத அளவிற்கு சிதைந்துவிட்டது. காயமடைந்தவர்கள் அருகிலுள்ள மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் நான்கு பேரின் நிலைமை கவலைக் கிடமாக உள்ளது. இறந்தவர்கள் பற்றி [illegible] இவ்வாறு பொலிஸார் தெரிவித்தனர். (ற)

வீழ்ந்து நொருங்கியது ரஷ்ய ராக்கெட்

(மொஸ்கோ)

ரஷ்யாவில் இராணுவத்தின் தகவல் தொடர்புக்கான செயற்கைக்கோளை சுமந்து சென்ற ராக்கெட் புறப்பட்ட சிறிது நேரத்தில் பூமியில் விழுந்து நொருங்கியது.

செவ்வாய்க்கிழமை இந்திய நேரப்படி காலை 6.19க்கு இவ் விபத்து நடந்தது.

பூமியிலிருந்து புறப்பட்ட ஒரு மணி நேரத்தில் அந்த செயற்கைக்கோள் சுற்றுவட்டப் பாதையில் செலுத்த ஏற்பாடாகியிருந்தது.

ஆனால், ராக்கெட்டின் எஞ்சினில் கோளாறு ஏற்பட்டு அது சைபீரியாவின் காட்டுப் பகுதியில் விழுந்து நொருங்கியது.

ரஷ்ய செய்தி ஸ்தாபனம் இச செய்தியை தெரிவித்துள்ளது. (ற)

போப் 2வது ஜான்பாலுக்கு புனிதர் பட்டம்; இன்டர்நெட் மூலம் தகவல்தர கோரிக்கை



(வத்திக்கான்)

மறைந்த போப்பாண்டவர் 2வது ஜான் பாலுக்குப் புனிதர் பட்டம் வழங்க வேண்டும் என்று வலியுறுத்துவோர், அவருடன் தமக்குக் கிடைத்த அனுபவங்கள் பற்றிய தகவல்களை இன்டர்நெட் மூலம் தெரிவிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

போப்பாண்டவர் 2வது ஜான் பால் குறித்து ஈமெயில் மூலமும் தபால் மூலமும் வரக்கூடிய தகவல்கள், வத்திக்கானின் அதிகாரப்பூர்வ இணையத்தளமான, **vicaria tusurbis.Org** என்னும் இணையத்தளத்தில் வெளியிடப் படுகின்றன.

புனிதர் பட்டத்துக்கு முன்னதாக 'அருளாளர்' பட்டம் வழங்கப்படும். போப்பாண்டவருக்கு அருளாளர் பட்டம வழங்க வேண்டும் என்பதற்கு ஆதாரமான 635 ஆவணங்கள் இதுவரை கிடைக்கப் பெற்றுள்ளன என்று வத்திக்கான் வானொலி திங்கட்கிழமை தெரிவித்துள்ளது.

அவருக்கு 'அருளாளர்' பட்டம் வழங்குவதற்கான சமய நடவடிக்கைகள் எதிர்வரும் 28ஆம் திகதி அதிகாரப்பூர்வமாகத் தொடங்கவுள்ளன.

எனவே, போப்பாண்டவரைச் சந்தித்தோர், அவரிடம் ஆசிபெற்றோர், அவரால் அற்புதங்கள் நடக்கப்பெற்றோர் ஆகியோர் அது பற்றிய தகவல்களை இன்டர்நெட் மூலம் அனுப்பி வைக்கலாம் என்று வத்திக்கான் வானொலி அறிவித்துள்ளது. (ற)

நேபாளத்தில் மாவோயிஸ்டுகள் அட்டகாசம்

சிறைகளை உடைத்து கைதிகள் விடுவிப்பு

(காத்மண்டு)

நேபாளத்தில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் பெரும் தாக்குதலில் ஈடுபட்டு சிறைகளைத தகர்த்து கைதிகளை விடுவித்ததோடு அரசு அலுவலகங்களையும் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர்.

நேபாளத்தில் மன்னர் ஞானேந்திரா ஆட்சியைக் கைப்பற்றிய நாள் முதல் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளின் வன்முறைகள் அதிகரித்து வருகின்றன. நேபாளத்தின் கிழக்குப் பகுதியில் உள்ளது கோடங் மாவட்டம். இங்குள்ள டிக்தெல் நகரத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் நூற்றுக் கணக்கானவர்கள் புகுந்தனர். நகரில் உள்ள சிறையை தகர்த்தும், அரசு அலுவலகங்களைத் தீயிட்டும் கொளுத்தினர். தாக்குதல் சம்பவத்தில் ஐந்து பொலிஸார் பலியாயினர். தீவிரவாதிகளில் இரண்டு பேரின் உடல்கள கண்டெடுக்கப்பட்டன.

இது குறித்து இராணுவ அதிகாரி ஒருவர் கூறுகையில்,

சிறையை தீவிரவாதிகள் தகர்த்து உள்ளனர். கைதிகளில் 63பேரைக் காணவில்லை. அவர்களை தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டு உள்ளது. நகரில் இருந்து தீவிரவாதிகள் வெளியேற்றப்பட்டு உள்ளனர். தாக்குதல் நடைபெற்ற இடம் தொலை தூரத்தில் உள்ள பகுதியாக இருப்பதால் தொடர்பு கொள்வதில் சிக்கல் ஏற்பட்டு உள்ளது என்றார்.

நேபாளத்தில் மன்னராட்சிக்கு எதிராக மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் பல ஆண்டுகளாக போராடி வருகின்றனர். கடந்த 1996 முதல் போராட்டத்தில் ஈடுபட்டு 12ஆயிரம் பேர் பலியாகி உள்ளனர். தீவிரவாத செயல்களால் வெளிநாட்டு நிதியுதவி மற்றும் சுற்றுலாத்துறை போன்றவை பாதிக்கப்பட்டு உள்ளன. இதனால், நேபாளத்தின் பொருளாதாரம் மோசமடைந்து உள்ளது. (ற)

அனல் காற்று-கரும் வெப்பம் ஒரே நாளில் 110 பேர் பலி

(லட்சுமணபுரி)

வெயில் கொடுமைக்கு இந்தியாவில் ஒரே நாளில் 110பேர் பலியாகியுள்ளனர்.

தென்மேற்கு பருவ மழை இந்தியாவின் சில பகுதிகளில் பெய்யத் தொடங்கி உள்ள போதிலும், பல இடங்களில் கோடை வெப்பம் இன்னமும் தணியவில்லை.

குறிப்பாக இந்தியாவின் வடபகுதிகளில் வெப்ப அலை வீசுகிறது. குறிப்பாக உத்தரப்பிரதேசம், பீகார் ஆகிய பகுதிகளில் வெப்பம் வழக்கத்தை விட அதிகமாக உள்ளது. அலகாபாத்தில் அதிகபட்சமாக 47டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளது. வடநாட்டில் அனல் காற்று வீசுவதால் பகல் நேரத்தில் யாருமே வீட்டைவிட்டு வெளியே வர முடிவதில்லை. வெயில் கொடுமைக்கு உத்தரப் பிரதேசத்தில் நேற்று ஒரு நாள் மட்டும் 70பேர் பலியானார்கள்.

நாட்டின் மற்ற பகுதிகளில் நேற்று வெயிலுக்கு 40 பேர் பலியானார்கள். இவர்களில் 22பேர் பீகாரையும் 7பேர் பஞ்சாப்- அரியானாவையும் சேர்ந்தவர்கள். நாடு முழுவதும் வெயிலுக்கு பலியானவர்கள் எண்ணக்கை 500ஐ எட்டியுள்ளது. (ற)

பயனில்சொல் பாராட்டு வானை மகன்எனல்
மக்கட் பதடி யெனல் - குறள்

வலம்புரி

உண்மையை பேச ரணில் துணியவேண்டும்

காலஞ்சென்ற முன்னாள் பிரதமர் டட்லிசேன நாயக்காவின் காலத்தில் இருந்து சிறுபான்மை மக்களை ஐக்கிய தேசியக்கட்சி பாதுகாத்து வருகின்றது. இவ்வாறு எதிர்க்கட்சித்தலைவர் ரணில்விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

டட்லிசேன நாயக்காவின் சிரார்த்ததினத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ரணில் விக்கிரமசிங்க மேற்போந்த கருத்தை முன்வைத்துள்ளார்.

ஒருவரின் சிரார்த்த தினத்தில் அவரைப்பற்றி புகழ்ந்து பேசுவது நாகரிகமாக இருப்பினும் அதற்காக இல்லாததைக் கூறுவது நல்லதோர் தலைமைக்கு அழகல்ல.

டட்லி சேனநாயக்காவின் காலத்தில் இருந்து ஐக்கிய தேசியக்கட்சி சிறுபான்மை மக்களுக்கு பாதுகாப்பு அளித்துவந்துள்ளதெனக் கூறிய ரணில் விக்கிரமசிங்க கூடவே டட்லி சேன நாயக்கா தமிழ் முஸ்லிம்மக்களின் உரிமைகளைப்பாதுகாப் பதற்காக பாடுபட்டவர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பிரிட்டிஷார் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கிய பின் அதனை பெரும்பான்மைக் கென அபகரித்துக் கொண்டவர்களில் முதன் மையானவர் அவர் என்பதை இங்கு குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும்.

கபடத்தனமாக பிரிட்டிஷாரிடமிருந்து ஆட்சியைப் பெற்றுக்கொண்டவர்கள்சிறுபான்மையான தமிழ், முஸ்லிம்மக்களுக்கு எந்த உரிமையையும் வழங்கவில்லை. மாறாக சேர்.பொன். இராமநாதன் போன்ற தமிழ்த்தலைவருக்கு போலி உறுதி மொழிகளை வழங்கி அவர்களை ஏமாற்றினர்.

இந்த நாட்டில் தமிழ், சிங்கள மக்கள் ஒற்றுமையாக வாழலாம் எனக்கூறி ஏமாற்றிய அதே டட்லியின் கபடத்தனத்திற்கு தமிழ்த்தலைவர்கள் ஏமாந்துபோயினர்.

அதன் விளைவையே நாடு இன்று அறுவடை செய்துகொண்டிருக்கின்றது.

இவ்வாறு ஒரு நாடு இன ஒற்றுமை இன்றி மோதிக்கொண்டிருக்கும் போது ஐக்கிய தேசியக் கட்சி சிறுபான்மை இனமக்களின் உரிமையை பாதுகாத்து வந்துள்ளது என ரணில் விக்கிரம சிங்க கூறுவது முழுப்பூசணிக்காயை சோற்றில் புதைப்பதாகவே இருக்கும்.

ரணிலுக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமார துங்காவிற்கு இடையே உள்ள மிகப்பெரியதொரு வேறுபாடு அவர்கள் இருவரினதும் மேடைப்பேச் சாகும்.

அதாவது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தனது மேடைப்பேச்சில் நாட்டின் இனப்பிரச்சினைக் கான காரணத்தை கூறும்போது 'எமது தலைவர் கள் விட்ட தவறுகள் காரணமாகவே தமிழ்மக்கள் ஆயுதப்போராட்டத்தில் ஈடுபடவேண்டியிருந்த தது. காலத்திற்கு காலம் ஆட்சி செலுத்தியவர்கள் சிறுபான்மை இன மக்களின் நலன்களை கவனிக்க தவறிவிட்டனர்' இவ்வாறு உரையாற்றுவார்.

இங்கு தமது தலைவர்கள் என ஜனாதிபதி கூறுவதுதனது தந்தையார் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண் டாரநாயக்கா உள்ளிட்ட சிங்களத்தலைவர்களை ளேயே.

ஜனாதிபதியால் கூறப்பட்ட கருத்து அனைவ ராலும் ஏற்றுக்கொள்ளப்படும். உண்மையைப் பேசுகின்றார் என்பதில் மக்கள் உணர்ந்து கொள்வர். ஆனால் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் யதார்த்தத்தைக் கூறும் பக்குவம் இன்னும் ஏற்படவில்லை என்றே கூறவேண்டும்.

அத்தகையதொரு பக்குவம் ஏற்பட்டிருந்தால் டட்லி செய்ததை ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் நரித்தந்திரத்தை எல்லாம் மறந்து ஐக்கியதேசி யக்கட்சி அன்றுமுதல் இன்றுவரை சிறுபான்மை மக்களை பாதுகாத்து வந்துள்ளது என்ற பொய் யை பகிரங்கமாக கூறியிருக்க மாட்டார்.

சுனாமி அனர்த்தத்தைப் பயன்படுத்தி

குறுகிய அரசியல் இலாபம் பெற அரசாங்கம் முயற்சித்து வருகிறது

ஜீ.எல். பீரிஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினைப் பயன்படுத்தி அரசாங்கம் குறுகிய அரசியல் இலாபம் பெற முயற்சி செய்துவருவதாக ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஜீ.எல். பீரிஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

இதன் காரணமாக சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்கள் மேலும் கஷ்டத்திற்குள்ளாகியிருப்பதாகவும் சுட்டிக்காட்டி யுள்ளார்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மொறட்டுவ

அரசிறை திணைக்களத்தில் மாற்றங்கள்

வரிசெலுத்துவோர் தெரிவிக்கும் முறைப்பாடு பற்றி ஆராய்ச்சி அதிகாரி ஒருவரை நியமிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக உள்நாட்டு அரசிறைத்திணைக் களப்பணிப்பாளர் நாயகம் ஆர்.பி.எல்.வீரசிங்க கூறியுள் ளார்.வரவுசெலவுத்திட்டதின் முன்மொழியப்பட்டதற்கமைய ஆராய்ச்சி அதிகாரி ஒருவரை நியமிப்பது வரிசெலுத்து வோரின் நம்பிக்கைகளை மேம்படுத்தி வரிஅறவீட்டு நடை முறையின் வெளிப்படையான தன்மையை உறுதிசெய் வதற்கு உதவியாக இருக்கும்.

அத்துடன் உள்நாட்டு அரசிறைத்திணைக்களத்தை மக்களுக்கு நட்புறவோடு சேவையாற்றக் கூடிய அமைப் பாக மாற்றியமைப்பதற்கான திட்டங்கள் அமுல் செய்யப்ப டுவதாக வீரசிங்க மேலும் தெரிவித்தார். (து-2)

தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனத்துக்கு பல்கலைக்கழக அனுமதித் தகைமை நீக்கம்

(யாழ்ப்பாணம்)

அரசாங்கப்பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களா கக் கடமையாற்றுவோரை நிரந்தரமாக்குவதில் இருந்து வந்த பிரதான தடையான பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமைப் பெற்றிருக்கவேண்டும் என்ற நிபந்தனையை கல்வி அமைச்சு நீக்கியுள்ளது.

அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.எல் குணவர்த் தன இது பற்றி சகல மாகாண கல்விச் செயலாளர்க ளுக்கும் அறிவித்துள்ளார்.

3 ஆண்டுகள் தொடர்ச்சியான சேவையை கஷ்ட, அதி கஷ்டப்பாடசாலைகளைக்கொண்டிருக்கும் தொண்டர் ஆசிரி யர்கள் அனைவரும் வெற்றிட எண்ணிக்கையைப் பொறுத்து முதல் கட்டமாக நிரந்தரமாக்கப்படுவார்கள் ஏனைய பாட சாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றோர் மத்தியில் போட்டிப்பரீட்சை ஒன்றை நடத்தி அவர்களை நிரந் தமாக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளதாக மேலதிக செயலாளர் தெரிவித்துள்ளார். (அ-2)

ஞானம் அறக்கட்டளை

மத, மொழி ரீதியான திட்டங்களுக்கு முன்னுரிமை அளிப்பதில்லை என்கிறது

(கொழும்பு)

கொழும்பு வடக்கு இராகம போதனா வைத்தியசாலை யில் 60 இலட்சம் ரூபா செலவில் மனநோயாளர் சிகிச் சைப் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் ஞானம் அறக்கட்டளையினால் அமைத் துக்கொடுக்கப்பட்ட இந்தச் சிகிச்சைப்பிரிவு கடந்த பதினா றாம் திகதி வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

ஞானம் அறக்கட்டளையின் ஸ்தாபகரும் பிரபல தொழில் அதிபருமான தேசமானிய ஏ.வை.எஸ். ஞானம் இந்த சிகிச்சைப் பிரிவைத் திறந்து வைத்தார்.

மதம்,மொழி ரீதியான திட்டங்களுக்கு முன்னுரிமை அளிப்பதில்லை என்பது தங்களது அறக்கட்டளையின் நோக்கமாகும என்று இந்த வைபவத்தின் போது உரையாற் றிய ஞானம தெரிவித்துள்ளார்.

அதன் அடிப்படையிலேயே அனைத்து மக்களுக்குமான பல சமூக நலத்திட்டங்களை தங்கள் அமைப்பு மேற்கொண்டு வருகின்றது என்றும் அவர் கூறியுள்ளார். இத்திட்டத்தின் ஒரு அங்கமாக சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 150 வீடுகளை அமைத்துக்கொடுக்கும் திட்டமும் அமுல் செய்யப் படவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(அ-2)

இவ்வாண்டுக்குள் மேலும் 30 ஆயிரம் தொலைபேசி இணைப்புகள் வழங்கப்படும்

(கொழும்பு)

புதிதாக 60 ஆயிரம் தொலைபேசி இணைப்புகளை வழங்கும் திட்டத்தின் கீழ் இதுவரை 25 ஆயிரம் இணைப் புக்கள் வழங்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறு வனம் அறிவித்துள்ளது.

இந்தத் திட்டம் நாடளாவிய ரீதியில் அமுல்செய்யப்படு வதாக இ.எஸ்.பி.நொட்றிக்கோ நிறுவனத்தின் மேலதிகாரி தெரிவித்துள்ளார்.

இவ் வாண்டு முடிவடைவதற்குள் மேலும் 30 ஆயிரம் தொலைபேசி இணைப்புகள் வழங்கப்படும். (அ-9)

தச்சுத்தொழிலாளர்களுக்கு உபகரணங்கள வழங்கும் வைபவத்தில் கலந்துகொண்டு உரை யாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அந்நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்று கையில், சுனாமி அனர்த்தத் துடன் ஒப்பிடும் அளவிற்கு இந்த நாட்டின் வரலாற்றில் எந்தவொரு பிரச்சினையும் ஏற்படவில்லை. எனவே, இத னைப் பயன்படுத்தி அரசாங் கம் அரசியல் இலாபம் பெறமுயற்சி செய்து வருகிறது.

சுனாமி நிவாரணங்கள் வழங்கும் விடயத்தில் சில சந்தர்ப்பங்களில் மதத் தலை வர்கள் ஈடுபட அனுமதிக்காமல் அரசாங்கம் அனைத்தை யும் பொறுப்பேற்று இறுதியில் எதனையும் செய்ய முடியாத நிலைக குத்தள்ளப்பட்டது எனவும் சுட்டிக்காட்டினார். (ற-4)

ஸ்ரீ.சு.க வின் ஜனாதிபதி வேட்பாளரான

மஹிந்தவுக்கு ஆதரவு வலுக்கிறது

பிரசார நடவடிக்கையில் மங்கள

(கொழும்பு)

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவதற்கு அமைச்சர் மங்கள சமரவீர பெரும் முயற்சி எடுத்துவருவதாகத் தெரியவருகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அடுத்த ஜனாதிபதி வேட்பா ளராக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை நிறுத்தும் முயற் சியில மங்கள சமரவீர மும்முரமாக ஈடுபடுட்டு வருவதாக ஐலன்ட் ஆங்கில வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

அமைச்சர் மங்கள சமரவீர,அமைச்சர் அனுரா பண்டாரநாயக் கவுடன் இணைந்து சீனாவிற்கு விஜயம் செய்யமுன்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கூட்டத்தில் வைத்து ஜனாதி பதி வேட்பாளராக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பெயரை பிரேரித்திருந்தார்.

அத்துடன், அமைச்சர் அனுரா பண்டாரநாயக்காவினை அடுத்த பிரதமர் பதவிக்கும் மங்கள சமரவீர பிரேரிக்கவுள்ள தாகவும் தெரியவருகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தீவிர ஆதரவாளரான மங்கள சமரவீர,பிரதமருக்கு ஆதரவாக தீவிரமான பிரசாரத்தை மேற்கொள்வார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே கட்சியின் அடிமட்ட உறுப்பினர்கள் உட்பட சிரேஷ்ட உறுப்பினர்கள் வரை அனைவரும் மஹிந்த ராஜபக்ஷவிற்கு தமது ஆதரவை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, ஐக்கியதேசியக்கட்சி தனது வேட்பா ளராக ரணில் விக்கிரமசிங்கவை அறிவித்துள்ளதுடன், நாடுமுழுவதும் பிரசாரத்தையும் ஆரம்பித்துள்ளது. ஜாதிக ஹெல உறுமயவும் விரைவில் தனது வேட்பாளரை அறி விக்கவுள்ளதுடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை பத வியிலிருந்து அகற்றவும் ஜாதிகஹெல உறுமய தீவிர பிர சாரம் மேற்கொண்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.(ற-6)

பெருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சுண்டுக்குளி புனித திருமுழுக்கு அரு ளப்பர் ஆலயப்பெருவிழா கடந்த 15ஆம் திகதி புனித கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வரு கிறது.

நவநாட திருப்பலியும் ஆராதனைகளும் பங்குத் தந்தை தொம்மையப்பு யேசுதாஸன் அவர்களின நெறிப்படுத்தலில் அதி வணக்கத்துக்குரிய லூயிஸ் பொன்னையா அவர்களின் அருளுரைகளுடன் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்று வியாழக்கிழமை மாலை நற்கருணை விழாவும், மறுநாள் காலை திருநாள் திருப்பலியும் புனிதரின் திருச்சொரூபப் பவனியும் இடம்பெறும். (ற)

சாயி அருள் முத்தம்

மனிதருடைய ஆசை எல்லையற்றதும் முடிவில்லா ததுமாகும். அது உங்களை பாலை வனத்தில் கானலை நாடிச்செல்ல வைக்கிறது. ஆகாயத்தில் கோட்டைகள் கட்டவைக்கிறது. அதற்கு அடிமை யாகிவிட்டால் அது அதிருப்தியையும் நம்பிக்கையிழப் பையும் வளர்க்கும். ஆனால் கிருஷ்ணர் மீது தாகத்தை விருத்தி செய்யுங்கள். அப்போது உங் களுக்குள்ளே ஆனந்தமென்னும் தண்புனல் ஊற் றைக் காண்பீர்கள். கிருஷ்ணநாமம் உங்களைப் பலமாகவும் உறுதியாகவும் ஆக்கும் .அது இனிமை யானது; தாங்கி நிற்கும் சக்தி வாய்ந்தது.

நன்றி
நாளாந்த நற்சிந்தனை

ஹன்டர் - ஆட்டோ விபத்தில் நான்கு பேர் படுகாயமடைந்தனர்

மீசாலை புத்தூர் சந்தியில் சம்பவம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி மீசாலை புத்தூர் சந்தியடியில் ஹன்டர் வாகனமும், ஆட்டோவும் விபத்துக்குள்ளானதில் நால்வர் காயமடைந்தனர்.

நேற்று மதியம் மீசாலை புத்தூர் சந்தியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் ஆட்டோவில் பயணம் செய்த வரணியைச் சேர்ந்தவர்களும், சாரதியும் படுகாயமடைந்து சாவகச்சேரி மாவட்ட ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக அம்புலன்ஸ் மூலமாக யாழ். போதனா வைத்திசாலைக்குக் கொண்டுவரப் பட்டனர்.

விபத்தின் காரணமான ஆட்டோ மோசமாகச் சேதமடைந்தது. ஆட்டோவில் பயணித்தோர் தலை, மார்பு, கால் முதலியவற்றில் காயங்களுக்கு உள்ளாகியிருந்தனர்.

காயமடைந்தவர்கள் விபரம் வருமாறு,

ஆழ்வாப்பிள்ளை தங்கராசா (வயது 38), கந்தசாமி சுகிர்தா (வயது 24), இராசு தயாபரன் (வயது 22), தங்கராசா பத்மகலா (வயது 33) ஆகியோரே படுகாயமடைந்தவர்கள் ஆவர்.

(ச-2)

பொலிஸ் சார்ஜன்...

புலனாய்வு பிரிவில் இருந்து மற்று மொரு பொலிஸ்கான்ஸ்டபிளுடன் துவிச்சக்கர வண்டியில் நகருக்குச் சென்றுகொண்டிருந்த சமயம் தண் ணீர்த்தாங்கிச் சந்தியில் இச் சம் பவம் இடம்பெற்றுள்ளதாக பொலி ஸார் தெரிவித்தனர். (ச)

ஹெல்கீசன்...

நேற்றுக்காலை 9.30மணிக்கு இலங்கை அரசாங்கத்தின் உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சி சந் திரன் விளையாட்டு மைதானத்தில் வந்திறங்கிய நோர்வேக் குழுவி னரை தமிழீழவிடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகப்பணிப்பாளர் புலித்தேவன் தலைமையிலான குழுவினர் வரவேற்றனர்.

பின்னர் விடுதலைப்புலிகளின் அரசியல் நடுவப்பணியகத்தில் சந் திப்பு நடைபெற்றது. சந்திப்பை முடித்துக்கொண்ட நோர்வேக்குழு வினர் மதியமளவில் கொழும்பு திரும்பினர். (ச-19)

மோட்டார் சைக்கிளில் கூட்டிச்சென்று வயோதிபப் பெண்ணின் நகை அபகரிப்பு

புங்குடுதீவு மடத்துவெளியில் சம்பவம்

(புங்குடுதீவு)

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்திற்கு தேர்த் திருவிழாவிற் குச் சென்ற வயோதிபப் பெண் ஒருவரை இரு இளைஞர்கள் மோட் டார் சைக்கிளில் அழைத்துச்சென்று நகைகளை அபகரித்துச் சென்றுள் ளனர்.

சம்பவம் பற்றித் தெரியவருவ தாவது,

குறிகட்டுவானில் நிலவிய பஸ் நெருக்கடிகளைக் காரணங்காட்டி இரு இளைஞர்கள் குறிப்பிட்ட வயோதிபப் பெண்ணை ஏற்றிக் கொண்டு யாழ். வந்தனர். இதன் போது புங்குடுதீவு மடத்துவெளி முருகன் கோயிலைக் கும்பிடப் போவதாகத் தெரிவித்து அங்கு சென்ற இரு இளைஞர்களும் அம் மாதுவையும் கோயிலைக் கும்பி டுமாறு பணித்துள்ளனர்.

சிறிதுநேரத்தின் பின்னர் அவர் அணிந்திருந்த நகைகளை அப கரித்துக்கொண்டு தப்பிச்சென்று ளனர்.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த பெண் ஒருவரே நகைகளைப் பறி கொடுத்தவராவார். (ச-126)

ஜனாதிபதி ஆலோசகர் நேற்று மட்டு. விஜயம்

(கொழும்பு)

திறைசேரியின் செயலர் ஜெய சுந்தரவும், ஜனாதிபதியின் ஆலோ சகர் மனோ தித்தவெலவும் நேற்று மட்டக்களப்புக்கு விஜயம் மேற் கொண்டனர். சுனாமி பேரழிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண நடவடிக்கைகளை நேரடி யாகக் கண்டறியும் நோக்கிலேயே இவர்களின் விஜயம அமைந்ததா கத் தெரிவிக்கப்படுகிறது. (ச-4)

நோர்வே...

நொச்சியில் நேற்று நடைபெற்றது.

தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வ னைச் சீந்தித்த பின்னர் இம்மகஜர் கையளிக்கப்பட்டது. கையளிப்பில் யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாச் செயலாளர் சூரியகுமார் மற்றும் திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார், அம்பாறை கடற்றொழி லாளர் கூட்டுறவுச்சங்கங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும் கலந்து கொண்டார்கள். (ச-19)

மனோகரா யாழ்

அதிரடி வெளியீடு

சியான் விக்ரம், சுதா, விவேக், பிரகாஷ்ராஜ், கவுண்டமணி, சார்லிஆகியோரின் சிறப்பு தடிப்பில்

அந்நியன்

இயக்கம்: ஷங்கர் இசை: ஹரிஸ் ஜெயராஜ்

கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30

நிறைஞ்சனாஸ்

சங்கானை

விஜயசாந்தி, லட்சுமி, சுஜாதா நடித்த

சுந்தரியா

கா.நே: 11.00, 2.45, 6.00 (பு.நே)

நாதஸ்ஸ் சினிமா

குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்

இன்று முதல்

Colin Tazil, Anjelina Jolie and Antony Hopkins நடித்த

ALEXANDER

ஆங்கிலம்

அலெக்சாண்டர்

கா.நேரம்: 10.30,2.30,6.30,9.30 (பு.நே)

பொதுக் கட்டமைப்பை பிரச்சினையாக்கி...

கேள்வி: இன்றைய சந்திப்புத் தொடர்பாக?

பதில்: நோர்வே உதவி வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான குழுவினருடன் கலந்துரையாடி யுள்ளோம். முக்கியமாக இன்றைய நிலைமைகள் பற்றியே அதிகநேரம் பேசப்பட்டது. வழமையான சந்திப்புப் போன்றே இச்சந்திப்பு அமைந்தது.

இன்றைய சந்திப்பில் பாரிய மாற்றங்கள், திருப் பங்கள் ஏற்படவில்லை. ஏனெனில் வழமைபோலவே ஜனாதிபதியின் வாக்குறுதிகளை மட்டும் எடுத்து வந்தவர்களாக நோர்வேக் குழுவினர் இருந்தார்களே தவிர, ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் முன்னெடுக்கக்கூடியதாக இச்சந்திப்பு அமையவில்லை.

முக்கியமாக இச்சந்திப்பில் நாம் தற்போதுள்ள களநிலைபரம் பற்றி நோர்வே தரப்புக்கு விளக்கியுள் ளோம். தற்போது யுத்தநிறுத்த சூழல் நெருக்கடிக் குள்ளாக்கப்பட்டுவிட்டது பற்றியும், மக்கள் முழுமை யாக அமைதி முயற்சிகளில் நம்பிக்கை இழந்துள்ள வர்களாக வாழ்ந்து வருகிறார்கள் என்பது பற்றியும், தமிழ்மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பான சூழல்பற்றியும் எடுத்துவிளக்கியுள்ளோம்.

தற்போது இருக்கின்ற நிலைமைகள், அமைதி முயற்சிகளை தொடர்ந்துபேணமுடியாத மோசமான நிலைமைகளை உருவாக்கலாம் என்பது பற்றியும் தெளிவாக விளக்கியுள்ளோம்.

கேள்வி: ஜனாதிபதி பொதுக்கட்டமைப்பு விடயத் தில் இழுத்தடிப்பு செய்வதாக தாங்கள் குற்றஞ்சாட்டி வந்துள்ளீர்கள். தற்போது நிலைமை எப்படியுள்ளது?

பதில்: தற்போதும் ஜனாதிபதியின் வாக்குறுதி மட்டும்தான் வெளிப்பட்டுக்கொண்டிருக்கே தவிர, ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் எவையும் முன்னெடுக்கப் படவில்லை.

பொதுக் கட்டமைப்பை நிறைவேற்று அதிகாரங் கொண்ட ஜனாதிபதி என்ற வகையில் உடனடியாக முடிவெடுத்து நடைமுறைக்குக் கொண்டுவருவது பெரும் பிரச்சினையில்லை.

பொதுக்கட்டமைப்பினை பாரிய பிரச்சினையாக்கி, அரசியல் காய்நகர்த்தலுக்குள் அதைத்தள்ளி தங் களுடைய அரசியல் இலாபங்களுக்கு பயன்படுத்தவே முயற்சிகள் நடைபெறுகிறது. அதைத்தான் ஜனாதி பதி செய்தவண்ணம் உள்ளார்.

பொதுக்கட்டமைப்புக்கு எதிரான உணர்வை சகல மட்டத்திலும் உருவாக்குவதற்கு இழுத்தடிப்பினை ஜனாதிபதி செய்தவண்ணம் உள்ளார். ஆகவே இழுத்தடிப்பு நிலையை ஒரு முடிவுக்குக்கொண்டுவர வேண்டும் என்பது பற்றி நாங்கள் ஏற்கனவே பல தடவைகள் வலியுறுத்தியுள்ளளோம். இன்றைய சந் திப்பின்போதும் ஜனாதிபதியின் இழுத்தடிப்பின் நிலைப்பாடே எமக்கு வெளிப்படுத்தப்பட்டது.

கேள்வி: நோர்வேத் தரப்பு செய்திகள் ஏதாவது கொணர்ந்ததா?

பதில்: வழமையான சந்திப்புப் போன்றே நடை பெற்றது. ஜனாதிபதியின் வாக்குறுதிகள் மட்டும் எமக்குக் கிடைத்தது. பொதுக்கட்டமைப்பு விரைவில் கைச்சாத்தாகும் என்ற வாக்குறுதிகள் மட்டும் எடுத்து வரப்பட்டது.

எம்மைப் பொறுத்தவரையில் ஜனாதிபதியின் வாக் குறுதிகளில் நம்பிக்கையில்லை என்பதையும், பொதுக் கட்டமைப்பு கைச்சாத்திடப்பட்டு நடைமுறைக்கு கொண்டுவரப்படும் பட்சத்தில் நம்பிக்கைகள் எமது மக்களுக்கு ஏற்படும். வாக்குறுதிகளை மட்டும் நம் பிக்கொண்டு செயற்பாடுகளை முன்னெடுக்கமுடியாது என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளோம்.

கேள்வி: பொதுக் கட்டமைப்பு விடயத்தில் முஸ் லிம் மக்கள் மனக்குறைகளைக் கொண்டுள்ளனர். அதுபற்றி விடார் ஹெல்கீசன் தகவல் ஏதும் தெரிவித் தாரா?

பதில்: ஆரம்பத்தில் இருந்தே பொதுக் கட்டமைப் பினைக் கொண்டுவரும்போது முஸ்லிம் மக்களின் பிரதிநிதித்துவம் தொடர்பாக மிகவும் உறுதியாக நாம் வலியுறுத்தியுள்ளோம். பொதுக் கட்டமைப்பு விடயத்தில் அது கொண்டுவரப்படவேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளோம்.

ஆகவே முஸ்லிம் தரப்பு மத்தியில் மட்டுமல்ல, ஜனாதிபதி சகல தரப்பிடமும் குழப்பத்தை ஏற்படுத் தும் வகையில் செயற்பாடுகளை முன்னெடுத்து வரு கிறார்.

பொதுக் கட்டமைப்பினை சர்ச்சைக்குரிய மர்ம மான விடயமாக்கி, பிரச்சினைகளைப் பெரிதாக்கி, இழுத்தடிப்புக்களை உருவாக்கி நிலைமைகளை மோசமாக்கும் வகையில் நிலைமைகள் உள்ளன.

முஸ்லிம் தரப்புடன் நாமும் ஒன்றும் பேசமுடியாத நிலையில் உள்ளோம். ஏனெனில் ஜனாதிபதியின் வாக்குறுதிகளை மட்டும் வைத்துக்கொண்டு முஸ் லிம் மக்களுக்கு எந்த வாக்குறுதிகளையும் கொடுக்க முடியாதுள்ளது. இதுதான் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடாகவுள்ளது.

கேள்வி: பொதுக் கட்டமைப்பில் முஸ்லிம் மக்கள் பிரதிநிதித்துவம் பெறுவதில் தங்கள் நிலைப்பாடு என்ன?

பதில்: பொதுக் கட்டமைப்பில் இருதரப்பும் ஒரு நிலைப்பாட்டுக்கு வந்த பின்னர், பொதுக் கட்டமைப் பில் அதிலுள்ள கட்டமைப்புக்கள் உருவாக்கப்படும் போது முஸ்லிம் மக்களின் பாதிப்பின் அடிப்படையில் முஸ்லிம் மக்களின் பிரதிநிதித்துவம் அமையும் என்பதை ஏற்கனவே வலியுறுத்தியுள்ளோம்.

ஒருநிலைப்பாடு ஏற்படும் பட்சத்தில முஸ்லிம் மக்களின் பிரதிநிதித்துவம் தொடர்பில் உறுதியான முடிவு எடுப்போம்.

கேள்வி: பொதுக் கட்டமைப்புத் தொடர்பில் வெளி வரும் செய்திகள் தொடர்பாக?

பதில்: செய்திகள் பொதுக் கட்டமைப்புத் தொடர் பில் வெளிவருவது தமிழ்மக்கள் மத்தியில் குழப் பத்தையும், அதிருப்தியையும் உருவாக்கியுள்ளது. இது தொடர்பாக இச் சந்திப்பில் தெளிவுபடுத்தியுள் ளோம்.

ஏனெனில் இந்தப் பொதுக்கட்டமைப்பு ஜனாதிப திக்கோ, நாடாளுமன்றத்திற்கோ பதில் சொல்வதாக இருக்கப்போவதில்லை.

பொதுக் கட்டமைப்பு முழுக்கமுழுக்க சுதந்திர மான அமைப்பாகவும், நிதியினைக் கையாள்வது ஒரு நிதிநிறுவனத்தின் பொறுப்பில் இருக்கும் என் பதை ஏற்கனவே வலியுறுத்தியிருக்கிறோம்.

அண்மைக்காலமாக ஜனாதிபதி செய்த விமர்சனம், உரைகள் மக்கள் மத்தியில் ஒரு குழப்பத்தை உருவாக்கியுள்ளது. இந்நிலைப்பாடு தொடர்பாகவும் நோர்வேத் தரப்பிடம் விளக்கியுள்ளோம்.

கேள்வி: விடுதலைப் புலிகளின் அரசியல்துறை செயலகங்கள் மீதும், போராளிகள் மீதும் நடத்தப் படும் தாக்குதல்கள் தொடர்பாக?

பதில்: இராணுவத் தரப்பு நிழல்யுத்தம் ஒன்றினை எம்மீது திணித்துள்ளது. எமது அரசியல் செயலகங் கள், போராளிகள் மீதான தாக்குதல்கள் என்பன யுத்தநிறுத்தத்தை சீர்குலைக்கின்ற செயல் என்பதை இன்றைய சந்திப்பில் சுட்டிக்காட்டியுள்ளோம்.

இவற்றிற்கு உரிய பரிகாரம் தேடாவிடின் நிலை மைகள் மிகமோசமான கட்டத்தை அடையும் என் பதை எடுத்து விளக்கியுள்ளோம்.

கேள்வி: ஜே.வி.பி. அரசிலிருந்து பிரிந்த பின்னர் அரசின் நிலைப்பாடு எப்படியுள்ளது?

பதில்: நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதி பதியின் கையில்தான் எல்லாம் உள்ளது. ஆகவே ஜனாதிபதிக்கு இடையூறாக இருந்தது ஜே.வி.பி. என்று கூறப்பட்டது. ஜே.வி.பி. அரசில் இருந்து விலகி யுள்ளது. ஆகவே ஜனாதிபதி உறுதியான தீர்மானங் களை எடுத்து, உறுதியான செயற்பாடுகளை முன் னெடுத்துச் செல்வது ஒரு பிரச்சினையான காரிய மல்ல.

ஜனாதிபதி காலத்தை இழுத்தடிப்பது பொருத்த மற்ற விடயமாகவே உள்ளதென சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நேற்றைய சந்திப்பின் நிறைவில் மக்களினால் மனுவொன்றும் நோர்வேயின் இலங்கைக் கான தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கரிடம் கையளிக்கப் பட்டது. (ச)

எம்மிடம் சகல விதமான ரீவிக்களும், CD,VCD,DVD PLAYERகளும், சகலவிதமான றேடியோக்களும், மற்றும் மின் சார உபகரணங்களும், உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்

நீயூ சிற்றி றேடார்ஸ்

மேல்மாடி. இல135/1 கஸ்தூரியார் வீதி
குளத்திற்கு முன்பாக யாழ்ப்பாணம்

(C- சு) T.P: 021 222 3226

பதவி வெற்றிடம்

உள்ளகச் செய்தியாளர்கள்

ஆண்கள் (இரவுக் கடமை)
பெண்கள் (பகல் கடமை)

ஒப்புநோக்குநர்கள்

ஆண்கள் (இரவுக் கடமை)
பெண்கள் (பகல் கடமை)
(க.பொ.த. உயர்தரத்தில் சித்தி)

புத்தகம் கட்டுநர்கள்

பெண்கள் (புத்தகம் கட்டுவதில் அனுபவம் உள்ளவர்கள் மட்டும்)

வலம்புரி நிறுவனத்திற்கு 6 கிலோ மீற்றர் தூரத்திற்குள் வசிப் பவர்கள் மட்டும் 24.06.2005 அன்று காலை 10 மணிக்கு சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடனும், சான்றிதழ் களுடனும் நேரில் வரவும்.

இல:03, 2 ஆம் ஒழுங்கை பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

ஆளணி முகாமையாளர் வலம்புரி

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.06.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.